393

# தேசீய தமிழ் வாசகம்

393
3.52

031(ப)
N52
136168

# தேசீய தமிழ் வாசகம்

## நான்காம் புத்தகம்

T. P. கோபால கிருஷ்ணன் B.A., L.T.,
தலைமை ஆசிரியர், போர்டு உயர்நிலைப்பள்ளி, போளூர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 AUG 1952
MADRAS

வர்தா பதிப்புக் கழகம்
திருவல்லிக்கேணி : : சென்னை

[விலை 0–8–0

முதற் பதிப்பு—1949
மறு பதிப்பு—1952

APPROVED FOR CLASS USE

BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE

*Vide Page* 29 *of Fort St. George Gazette Part I-B, dated* 7-5-52

136168
600 008

*All Rights Reserved*

Kabeer Printing Works, Madras (1970)

# முன்னுரை

"தேசீய தமிழ் வாசகம்" என்னும் பெயருடன் வெளிவரும் இந்நூல் வரிசை புதிய பாடத் திட்டத்தைத் தழுவி எழுதப்பட்டதாகும். பாட இயலின் நோக்கத்திற்கிணங்க, ஒவ்வொரு பாடமும் பிள்ளைகளின் உள நிலை, அவர்களுக்கு ஏற்படும் விருப்பம் இவற்றை ஒட்டி பிள்ளைகள் நன்கு அறிந்துகொள்ளக்கூடிய வகையில் எழுதப்பட்டுள்ளது.

மொழிநடை சிறு பிள்ளைகளுக்கு ஏற்ற வண்ணம் கவனத்துடன் அமைக்கப்பட்டிருக்கிறது. கைத்தொழில், வரலாறு, இலக்கியம், கடிதம் எழுதும் முறை, பெரியோர் வரலாறு, கதை, நாடகம் முதலியவை பற்றிய பாடங்கள் இதில் இடம் பெற்றிருக்கின்றன. வகுப்புக்கு ஏற்ற அளவு பாடல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பாட இயலிற் குறித்தவாறு புதிய சொற்கள் பாடந்தோறும் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாட இறுதியிலும் அருஞ் சொற் பொருள்கள் தரப்பட்டுள்ளன. அதன்பின் பாடங்களைத் தழுவிய கேள்விகள் இணைக்கப்பட்டுள்ளன.

பயிற்சிகள் மிகுந்த கவனத்துடன் எழுதப்பட்டிருக்கின்றன. பிள்ளைகளின் அறிவை விளக்கவும், பெருக்கவும் தகுந்தவாறு சில பயிற்சிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. பாட இயலிற் கண்டுள்ளவாறு வகுப்புக்கேற்ற வகையில், சிறு அளவு இலக்கண விளக்கம் எளிய முறைவில் பிள்ளைகள் மனத்தில் பதியும் வகையில் தரப்பட்டிருக்கிறது.

பொதுவாக, இந்நூல் வரிசை பிள்ளைகளின் அறிவை வளர்த்து முற்போக்கு பெறச் செய்யும் கருத்துடன், தக்க முறையில் எழுதப்பட்டிருக்கிறது என்று கூறலாம். அறிஞர் இந்நூல் வரிசையை வரவேற்று ஆதரவு நல்குமாறு வேண்டுகிறேன்.

இப்புத்தக வரிசையைத் தயாரிப்பதில் எனக்கு உதவிபுரிந்த புலவர் திரு. பு. செல்வராசன் அவர்கட்கும் புலவர் திரு. சி. செல்வத்தாண்டவன் அவர்கட்கும் எனது நன்றி உரியதாகும்.

T. P. கோபாலகிருஷ்ணன்

# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தமிழ் நாடு | ... | 1 |
| 2. | நகராண்மைக் கழகம் | ... | 5 |
| 3. | மாணவர் கழகம் | ... | 9 |
| 4. | நாட்டுத் தந்தை | ... | 13 |
| 5. | பனைமரத் தொழில் | ... | 17 |
| 6. | பனைமரம் (பாட்டு) | ... | 21 |
| 7. | உடற் பயிற்சி | ... | 24 |
| 8. | இக்காலப் பாவலர் | ... | 28 |
| 9. | பத்திரிகைச் செய்திகள் | ... | 33 |
| 10. | கிராமமும் நகரமும் (உரையாடல்) | ... | 37 |
| 11. | பொத்தான் செய்தல் | ... | 41 |
| 12. | அல்லி அரசி கொலு (பாட்டு) | ... | 46 |
| 13. | மேட்டூர் அணை | ... | 49 |
| 14. | சுகாதாரம் | ... | 53 |
| 15. | இன்பச் செலவு | ... | 56 |
| 16. | சங்க கால நிகழ்ச்சி | ... | 60 |
| 17. | என் வரலாறு (தாமிரபரணியின் சுய சரிதை) | ... | 64 |
| 18. | செந்தமிழ் நாடு (பாட்டு) | ... | 68 |
| 19. | யானையும் தையற்காரனும் (படப் பயிற்சி) | ... | 70 |
| 20. | கடிதங்கள் | ... | 72 |
| 21. | கடிதத்தின் பயணம் | ... | 76 |
| 22. | கப்பல் | ... | 81 |
| 23. | வெண்காயப் பயிர் | ... | 85 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 24. | நாகர் தீவில் சாதுவன் (நாடகம்) ... | 89 |
| 25. | செய்யுள் பாடம் | |
| | (1) தமிழ் மொழி வாழ்த்து ... | 93 |
| | (2) நறுந்தொகை ... | 93 |
| | (3) மூதுரை ... | 95 |
| | (4) நல்வழி ... | 96 |
| | (5) சதகங்கள் ... | 98 |
| | (6) சேயை இழந்த தாய் ... | 100 |
| | (7) நாட்டு வணக்கம் ... | 102 |
| | செய்யுட்பாடக் குறிப்புகள் ... | 103 |

# தேசீய தமிழ் வாசகம்

## நான்காம் புத்தகம்

## 1. தமிழ் நாடு

1. நாம் பேசும் மொழிக்குத் தமிழ் என்பது பெயர். தமிழ் மொழி வழங்கும் நம் நாடு தமிழ்நாடு ஆகும். தமிழ் நாடே நம் தாய்நாடு. தமிழே நம் தாய்மொழி.

2. தமிழ்நாடு மிகுந்த பெருமை உடையது. பழங்கால முதலே தமிழர்கள் பெருமையுடன் வாழ்ந்தவர்கள்; சிறந்த நாகரிகம் உடையவர்கள்.

3. பண்டை காலத்தில் நம் தமிழ் நாடு மிகவும் பரவியிருந்தது. கடல் வெள்ளம் மூன்று முறை ஏற்பட்டதனல் தமிழ் நாட்டின் தெற்குப் பகுதியில் பல இடங்கள் நீரில் மூழ்கி விட்டன. பிறகு **கன்னடநாடு, தெலுங்குநாடு, மலையாளநாடு** எனத் தமிழ்நாட்டிலிருந்து மூன்று பகுதிகள் பிரிந்தன.

4. இப்போது, தமிழ்நாடு தெற்கே குமரிமுனை, வடக்கே வேங்கடம், கிழக்கே கடல், மேற்கே மலையாள-கன்னட நாடுகள் என்னும் எல்லைக்குள் அடங்கிவிட்டது. திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்ஆர்க்காடு, வடஆர்க்காடு, செங்கற்பட்டு, சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களை இன்று நாம் தமிழ் நாடு என்கிறோம். பொருநை, வைகை, காவிரி, தென்

பெண்ணை, பாலாறு முதலிய ஆறுகள் தமிழ் நாட்டில் பாய்கின்றன.

5. தமிழ்நாடு, பழங்காலத்தில் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என மூன்று பிரிவுகளாய் இருந்தது. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் அவற்றை ஆண்டனர். இம் மூவர் தவிர, வேறுபல குறுநில மன்னர்களும் தமிழ்நாட்டில் இருந்தனர்.




6. பழந்தமிழ்நாட்டில் அனைவரும் கல்வி கற்றனர். கற்றவர்களுக்கு எங்கும் பெருமை இருந்தது. அரசர்கள் புலவர்களை ஆதரித்தனர். ஆண்களும் பெண்களும் கல்வி கற்று, ஒழுக்கம் மிகுந்தவர்களாய் இருந்தனர்; சிறந்த அறிஞர்களாயுமிருந்தனர்.

7. கல்வியும் வாணிகமும் கைத்தொழிலும் முற்காலத்தில் உயர்நிலை பெற்றிருந்தன. தமிழர்கள் வீரர்களாயிருந்

தனர் ; மேல்நாடு—கீழ்நாடுகளுடன் கடல் வாணிகம் செய்தனர் ; தமிழ்ப் பண்பாட்டை எங்கும் பரப்பினர்.

8. தமிழ் அரசர்கள் நீதிதவறுமல் ஆட்சி செய்தனர் ; நாட்டைப் பல மண்டலங்களாய் வகுத்துச் சிறந்த முறையில் ஆண்டனர். மக்கள் மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் கொண்டிருந்தனர். நாம் இத்தகைய தமிழ்ப் பெருமக்களின் மரபில் வந்தவர்கள். நாம் நம் பழம் பெருமைகளைக் காத்துக் கல்வி, கைத்தொழில், வாணிகம் முதலியவற்றை வளர்த்து மீண்டும் உயர்நிலை அடைவோமாக.

| | | |
|---|---|---|
| வழங்கும் | பொருநை | சேரர் |
| தாய்நாடு | வைகை | மாவட்டம் |
| நாகரிகம் | காவிரி | சோழர் |
| வெள்ளம் | தென்பெண்ணை | பாண்டியர் |
| கன்னடம் | பாலாறு | குறுநிலம் |
| தெலுங்கு | மன்னர் | மண்டலம் |

## அரும்பொருள்

சிறந்த - பெருமையுடைய. குமரி - தமிழ் நாட்டின் தென் கோடியிலுள்ள நிலம் முடியும் பகுதி. வேங்கடம் - திருப்பதிமலை. மாவட்டம் - ஜில்லா. பொருநை - தாமிரபருணி யாற்றின் பழைய பெயர். குறுநில மன்னர்கள் - சிற்றரசர்கள்.

## கேள்விகள்

1. தமிழ்நாடு என்பது எதற்குப் பெயர் ?
2. தமிழ்நாடு குறுகிவிட்டதற்குக் காரணம் என்ன ?
3. இப்போதைய தமிழ் நாட்டின் எல்லைகள் யாவை ?
4. இன்றைய தமிழ் நாட்டின் பகுதிகள் யாவை ?
5. முற்காலத் தமிழ் நாட்டின் பெருமை யாது ?

### பயிற்சி

1. தாய்மொழி, பெருமை, சிறந்த, நாகரிகம், பண்டைக் காலம், மாவட்டம், மேல் நாடு, கீழ்நாடு, உயர்நிலை—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. பண்டைத் தமிழ் நாட்டின் பெருமை குறித்துப் பத்து வரிகள் எழுது.

3. பெருமை, முதல், இன்று, கற்றவர், தவறாமல், முற்காலம், உயர்நிலை—இவற்றிற்கு எதிர்ச் சொற்கள் கூறு.

### இலக்கணம்

## நிறுத்தக் குறிகள்

I. 1. , இது காற்புள்ளி. இதனைக் காமா என்றும் சொல்லலாம். காற்புள்ளி வைத்துள்ள இடத்தில் ஒரு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும். ஒரு மாத்திரை என்பது, கண்ணிமை தானாக மூடித் திறக்கும் நேரமேயாகும்.

2. . இது முற்றுப்புள்ளி. இது வாக்கியம் முடியும் இடத்தில்வைக்கப்படும். இக்குறி வைத்துள்ள இடத்தில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

3. ? இது கேள்விக்குறி. இக்குறி வைத்துள்ள இடத்தில் கேள்வி கேட்பது போலப் படிக்க வேண்டும்.

4. ! இது உணர்ச்சிக்குறி. இக்குறி வைத்துள்ள இடம் வியப்பு, துக்கம், மகிழ்ச்சி முதலிய உணர்ச்சிகளைத் தெரிவிக்கும்.

5. "—" இவை மேற்கோள் குறிகள். பிறர் கூறியவற்றை அவர்கள் கூறியது போலவே எழுதும்போது, நாம் இக்குறிகளை இடுதல் வேண்டும்.

II. இரண்டாம் பாராவில் உள்ள ஒருமை—பன்மைகளை எடுத்து எழுது.

## 2. நகராண்மைக் கழகம்

1. நம் நாடு பல கிராமங்களாகவும் சில நகரங்களாகவும் அமைந்திருக்கிறது. கிராமங்களின் பொதுப்பணிகளைக் கவனித்து நடத்தப் **பஞ்சாயத்துக் கழகங்கள்** இருக்கின்றன. பல கிராமங்களின் நன்மைகளைச் சேர்த்துக் கவனிப்பதற் கென்று, **நாட்டாண்மைக் கழகங்கள்** இருக்கின்றன.

2. தமிழ் நாட்டில் உள்ள கிராமங்கள் பத்துப் பகுதிகளாய்ப் பிரிக்கப்பட்டு, பத்து மாவட்டங்களாய் அமைக்கப் பட்டிருக்கின்றன. பத்து மாவட்டங்களுக்கும் பத்து நாட்டாண்மைக் கழகங்கள் இருக்கின்றன.

3. இந்தக் கழகங்களில் உறுப்பினராகிப் பொதுப் பணி செய்கிறவர்களைப் பொது மக்களே தேர்ந்தெடுக்க வேண்டும். இவ்வாறே, நகரங்களின் பொது மக்களுடைய நலன்களைக் கவனித்துச் செய்வதற்கென்று **நகராண்மைக் கழகங்கள்** இருக்கின்றன.

4. நகராண்மைக் கழகத்தில் உறுப்பினர் ஆகிப் பொதுப்பணி செய்பவர்களையும் பொது மக்களே தேர்ந்தெடுப்பார்கள். இவ்வாறு தேர்ந்தெடுத்து அனுப்புவதற்குத் **தேர்தல்** என்பது பெயர். பொதுப்பணி செய்வதற்கு உரியவர் யார் என்று தெரிகிறதோ, அவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மக்களுக்கு உண்டு. இதற்கு **வாக்குரிமை** என்பது பெயர். வாக்குரிமை அளிப்பவர்கள் **வாக்காளர்கள்** எனப்படுவர்.

5. இவ்வண்ணம் பொதுமக்கள் தேர்ந்தெடுத்த உறுப்பினர்களே, பஞ்சாயத்துக் கழகம், நாட்டாண்மைக் கழகம், நகராண்மைக் கழகம் முதலியவைகளை நடத்துகின்றனர். இப்படி நடத்தும் ஆட்சி **பொறுப்பாட்சி** எனப்படும்.

6. தமிழ் நாட்டில் சென்னையே பெரிய நகரம். இது தமிழ் நாட்டின் தலைநகரம். இதன் பொது நன்மைகளைக் கவனிக்க ஒரு நகராண்மைக் கழகம் இருக்கிறது. சென்னை நகரம் பல வட்டாரங்களாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. வட்டாரத்துக்கு ஒருவராய்ப் பலர் இக்கழகத்தின் உறுப்பினர் ஆகின்றனர்.



சென்னை நகராண்மைக் கழகம்

7. நகரத்திற்கு இரவில் விளக்கு ஒளி, குடித்தண்ணீர், முதலிய வசதிகளைச் செய்தல், தெருக்களைச் செப்பனிடுதல், குப்பை கூளங்களை அகற்றித் தெருக்களை நாள்தோறும் தூய்மை செய்தல், பிணி வராமல் காத்தல், துவக்கக் கல்வி பரப்புதல் முதலிய பணிகள் யாவும் நகராண்மைக் கழகத்தைச் சேர்ந்தவை. இவ்வேலைகளைச் செய்வதற்காக நகராண்மைக் கழகம் பலவகை வரிகளை மக்களிடமிருந்து பெறுகிறது.

8. இப்பணிகளைத் தவறின்றி நடத்திச் செல்லப் பல பணியாளர் ஊதியத்திற்கு அமர்த்தப்பட்டிருக்கின்றனர்.

இவர்களுடைய வேலைகளை மேற்பார்வையிடும் மேலதிகாரிக்குக் **கமிஷனர்** என்பது பெயர். இவருக்குத் துணையாகப் பல உதவி அலுவலாளர் இருக்கின்றனர்.

9. நகராண்மைக் கழகத்தின் மூலம் மக்களுக்குத் தேவைப்படும் நன்மைகளை அவ்வப்போது செய்வது பொது மக்கள் தேர்ந்து அனுப்பிய உறுப்பினர் கடமை ஆகும். இந்த உறுப்பினர்களுக்குத் தலைவர் மேயர் எனப்படுவார். இத்தலைவரை உறுப்பினர் தங்களுக்குள் தேர்ந்தெடுப்பார்கள். இவர்கள் அனைவரும் சேர்ந்து நடத்துவதே நகராண்மைக் கழகம் என்பதாகும்.

| | | |
|---|---|---|
| நாட்டாண்மைக் கழகம் | வாக்காளர் | செப்பனிடுதல் |
| நகராண்மைக் கழகம் | பொறுப்பாட்சி | பணியாளர் |
| தேர்தல் | வட்டாரம் | ஊதியம் |

## அரும்பொருள்

பொதுப்பணி - பொது மக்கள் நன்மைக்குரிய வேலை. நாட்டாண்மைக் கழகம் - ஜில்லா போர்டு. நகராண்மைக் கழகம் - நகரசபை. பொறுப்பாட்சி - பொறுப்புடன் நடத்தும் ஆட்சி. வட்டாரம் - டிவிஷன். செப்பனிடுதல் - ஒழுங்குபடுத்துதல். அலுவலாளர் - உத்தியோகஸ்தர்கள்.

## கேள்விகள்

1. நம் நாடு எப்படி அமைந்திருக்கிறது ?
2. தமிழ் நாட்டுக் கிராமங்கள் எவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கின்றன ?
3. நகராண்மைக் கழகம், நாட்டாண்மைக் கழகம் என்பவை யாவை ?
4. தேர்தல் என்பது யாது ?
5. பொறுப்பாட்சி என்பது எதற்குப் பெயர் ?
6. நகராண்மைக் கழகத்தின் வேலை என்ன ?
7. நகராண்மைக் கழகத்தை நடத்துவோர் யாவர் ?

## பயிற்சி

I. 1. கிராமம், நகரம், பஞ்சாயத்துக் கழகம், நாட்டாண்மைக் கழகம், நகராண்மைக் கழகம், மாவட்டம், தேர்தல், வாக்காளர், வாக்குரிமை, வட்டாரம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. நன்மை, பெரிய, பலர், இரவு, தவறு, இருக்கிறது, ஒளி, துவக்கம்—இவற்றிற்கு எதிர்ச் சொற்கள் கூறு.

II. 1. கோடிட்ட இடங்களில் தகுந்த நிறுத்தக் குறிகளை இடு :—

தமிழ் நாடு | பழங்காலத்தில் சேரநாடு | சோழநாடு பாண்டிய நாடு என மூன்று பிரிவுகளாய் இருந்தது | சேர | சோழ | பாண்டிய மன்னர்கள் அவற்றை ஆண்டனர் | இம்மூவர் தவிர | வேறு பல குறுநில மன்னர்களும் தமிழ் நாட்டில் இருந்தனர் |

2. கால் புள்ளி, முற்றுப் புள்ளி—இவற்றை எங்கெங்கு இடுதல் வேண்டும் ?

3. உணர்ச்சிக்குறி இடுவதன் கருத்து என்ன ?

4. கேள்விக்குறி ஏன் இடவேண்டும் ?

5. மேற்கோள் குறிகள் எங்கு இடுதல் வேண்டும் ?

6. இப்பாடத்தின் ஆறும் பாராவிலுள்ள ஒருமை, பன்மைகளை எடுத்து எழுது.

# 3. மாணவர் கழகம்

1. எங்கள் பள்ளியில் ஐந்து வகுப்புகள் இருக்கின்றன. நான்காம், ஐந்தாம் வகுப்புப் பிள்ளைகளுக்கெனத் தமிழ்க் கழகம் ஒன்று ஏற்பட்டது. தலைமை ஆசிரியர் இந்த இரண்டு வகுப்பு மாணவர்களையும் ஒரு கூட்டமாய்க் கூட்டினர்; "பிள்ளைகளே, நீங்கள் நன்ருய்ப் பேசப் பழக வேண்டும்; பல பொருள் பற்றிப் பேசத் திறமை பெற வேண்டும்." அதற்காக இப்பொழுது தமிழ்க் கழகம் ஏற்படுத்த வேண்டும்.



2. அக்கழகத்துக்குத் தலைமை ஆசிரியர் தலைவரா யிருப்பார்; நான்காம் வகுப்பு ஆசிரியர் துணைத்தலைவரா யிருப்பார்; உங்களுக்குள் ஒருவனைக் கழகச் செயலாளனைய்த் தேர்ந்தெடுப்பது உங்கள் வேலையாகும். செயலாளனுக்கு உதவியாகச் செயற்குழு ஒன்று இருக்கும். அக்குழுவில் அறுவர் உறுப்பினராய் இருப்பர். நீங்களே அவர்களையும் தேர்ந்தெடுக்க வேண்டும்," என்ருர்.

3. நாங்கள் தலைமை ஆசிரியர் முன்னிலையில் நெடுஞ்செழியன் என்னும் ஐந்தாம் வகுப்பு மாணவனைச் செயலாளனுகத் தேர்ந்தெடுத்தோம். அவன் சிறந்த பேச்சாளன்; அஞ்சா நெஞ்சினன்; படிப்பில் முதல் மாணவன். ஆதலின் எல்லோரும் அவனையே தேர்ந்தெடுத்தோம்; நான்காம் வகுப்பு மாணவர் மூவரையும் ஐந்தாம் வகுப்பு மாணவர் மூவரையும் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தோம்.

4. தேர்தல் நடந்த மறுநாள் துணைத்தலைவர் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது. எங்கள் கிராம மணியக்காரர் **மயில்வாகனர்** வந்து கழகத்தைத் திறந்துவைத்தார். அவர், "அன்புள்ள பிள்ளைகளே, மாணவர்கள் ஆகிய நீங்களே எதிர்காலத்தில் நமது கிராமத்தை நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டுபவர்கள். ஆதலால், நீங்கள் நன்ருய்ப் படியுங்கள்; பல பொருள்பற்றிப் திறம்படப் பேசப் பழகுங்கள்; எல்லோரும் ஒரு தாய் பெற்ற பிள்ளைகளைப்போல ஒற்றுமையாய் இருங்கள். ஒற்றுமையே வலிமை. நான் உங்கள் நன்மைக்காக ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு நூல் நிலையம் வைத்திருக்கிறேன். அதில் உள்ள நூல்களை வாங்கிப் படியுங்கள்; பொது அறிவைப் பெருக்கிக் கொள்ளுங்கள்," என்று அறிவுரை கூறினர்.

5. நாங்கள் அன்றுமுதல் மயில்வாகனர் நூல் நிலையத்திலிருந்து கிராமச் சுகாதாரம், கிராமக் கைத்தொழில்கள், பயிர்த் தொழில்கள், எரு வகைகள், பழத்தோட்டம், காய்கறித் தோட்டம், பூந்தோட்டம், நீர்ப்பாசனம், காடுகள் வளர்த்தல், கிராமக் கல்வி, கூட்டுறவு இயக்கம், கிராமத்தார் ஒற்றுமை முதலிய பல பொருள்களைப் பற்றிய நூல்களைப் படித்து வருகிறோம்; படித்து அப்பொருள்களைப்பற்றிக் **குறிப்புகள்** எடுக்கின்றோம்; அக்குறிப்புகளை வைத்துக் கொண்டு பேசிப் பழகுகின்றோம்.

6. மயில்வாகனரே பல கூட்டங்களுக்குத் தலைவரா யிருந்து எங்களைப் பேசவிடுகிறார்; புதிய புதிய நூல்களை வரவழைத்துத் தருகிறார்; மேல்நாடுகளில் உள்ள கிராமங்கள், கிராமப் பள்ளிகள், கிராமப் பிள்ளைகள், கிராமக் கைத் தொழில்கள் பற்றிய நூல்களையும் வரவழைத்துக் கொடுத் திருக்கிறார். நாங்கள் அவற்றைப் படித்து வருகிறோம். ஒவ் வொரு கிராமத்திலும் இத்தகைய நூல்நிலையம் இருந்தால் நம் நாட்டுக் கிராமப் பிள்ளைகளின் அறிவு வளர இடமுண்டு. உங்கள் கிராமத்தில் நூல் நிலையம் உண்டா?

| | | |
|---|---|---|
| தலைமை ஆசிரியர் | செயற்குழு | பேச்சாளன் |
| துணைத்தலைவர் | அறுவர் | அஞ்சாநெஞ்சினன் |
| செயலாளர் | முன்னிலையில் | திறம்பட |

### அரும்பொருள்

செயலாளன் - காரியதரிசி. செயற்குழு - காரியக் கூட்டம். அஞ்சா நெஞ்சினன் - பயமில்லாத மனமுடையவன்.

### கேள்விகள்

1. உன் பள்ளியில் தமிழ்க் கழகம் உண்டா? உண்டெனில் அதில் எந்தெந்த வகுப்பு மாணவர் சேர்ந்திருக்கின்றனர்?
2. அக்கழகத்தின் அமைப்பை விளக்கு.
3. தலைமை ஆசிரியர் கூறிய வழி யாது?
4. மயில்வாகனர் யாது கூறினர்?
5. பிள்ளைகள் எப்பொருளைப் பற்றிப் பேசினர்?
6. மயில்வாகனர் செய்த பொது நன்மை யாது?
7. நீ நூல்நிலையத்தால் அடையும் நன்மை யாது?

### பயிற்சி

I. 1. தமிழ்க்கழகம், கூட்டம், செயலாளன், தலைவர், உறுப் பினர், அஞ்சா நெஞ்சினன், பேச்சாளன்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. உன் பள்ளி மாணவர் கழகம்பற்றிப் பத்து வரிகளில் சுருக்கி எழுது.

II. 1. கோடிட்ட இடத்தைத் தக்க சொற்களை எழுதி நிரப்பு :—

1. தூங்கப் —வேண்டும்
2. குளிரில் —வேண்டும்
3. தாகந் தீரத் —வேண்டும்
4. விளக்கேற்றத் —வேண்டும்
5. மழையில் போகக் —வேண்டும்
6. முள் எடுக்க —வேண்டும்

2. தக்க நிறுத்தக் குறிகளை இடு :—

தலைமை ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து | | பிள்ளைகளே | நீங்கள் நன்ருகப் பேசப் பழகவேண்டும் | நீங்கள் இங்கு நன்ருகப் பேசினுல் | பிறகு பெரியவர்களானவுடன் | சிறந்த மேடைப் பேச்சாளராகலாம் | என்று கூறினர்.

## இலக்கணம்

### வாக்கியம்

முருகன் போனுன், முருகன் போய், போன முருகன்—இவைகளில் முதலில் இருப்பது கருத்து முடிந்த தொடர். ஆகையால், அது வாக்கியம் எனப்படும். மற்ற இரண்டும் கருத்து முடியாதவை. ஆகையால் அவை வாக்கியங்கள் ஆகா.

கண்ணன் வந்தான், இராமன் படித்தான், சீதை அழுதாள்—இவை கருத்து முடிந்த தொடர்கள் ஆகையால் வாக்கியங்கள் ஆகும்.

கந்தன் வந்து, வந்த கந்தன், உட்கார்ந்த சீதை, வள்ளி அழுதாள், கறுப்பன் சிரித்தான்—இவற்றில் எவை வாக்கியங்கள்?



# 4. நாட்டுத் தந்தை

1. **மகாத்மா காந்தி** பெயர் தெரியாதவர்கள் நம் நாட்டில் எவரும் இல்லை. அவர் புகழ் உலகம் முழுவதும் பரவியுள்ளது. அவரைச் 'சிறந்த அறிவாளி' என்று உலகம் போற்றுகிறது. 'நம் நாட்டிற்கு உரிமை வாங்கிக் கொடுத்தவர்' என்று நாம் அவரைப் போற்றுகிறோம்.

2. மகாத்மா காந்தி பெரிய அறிவாளி; நிறையக் கற்றவர்; சட்டம் படித்தவர்; நல்ல குணம் உடையவர்; சாந்தமானவர். நம் நாட்டு மக்களுடைய துயரத்தைக் கண்டு அவரால் சகிக்க முடியவில்லை. ஆகவே, அவர் மக்களுக்கு உழைக்கத் தம் சுகவாழ்வை விட்டார்; நல்ல உடுப்புகள் அணிவதை விட்டார்; அரையாடை கட்டினர். அவர் பல நாட்கள் உண்ணுநோன்பு இருந்தார்; மக்கள் எல்லோரையும் ஒற்றுமைப்படுத்தினர்; நாட்டின்மீது மக்களுக்குப் பற்று உண்டாகும்படி செய்தார்.

3. இதன் பலனாய் நாட்டில் ஒற்றுமை ஏற்பட்டது. மக்கள் தங்கள் அடிமைத்தனத்தை உணர்ந்து, உரிமை பெற ஆசைப்பட்டனர். மகாத்மா காந்தி தலைவராக இருந்து மக்களை ஒற்றுமைப்படுத்தி, நாட்டை அடிமைத்தனத்தி லிருந்து விடுதலை செய்தார். இன்று நம் நாடு உரிமை நாடாய் இருக்கிறது. நாம் எவருக்கும் அடிமை இல்லாத மக்களாய் இருக்கின்றோம்.

4. மகாத்மா காந்தி நம் நாட்டு மாணவர்கள் முன் னேற்றத்தில் பெருங் கவலை கொண்டிருந்தார். அவர் மாணவர்களுக்கென்று அருளிச்செய்த பொன்மொழிகள் பல. அவற்றுள் சிலவற்றை இங்குப் படிப்போம் :—

1. பொய் பேசக்கூடாது. எக்காரணத்தை முன் னிட்டும் எவர் இடத்திலும் எப்போதும் உண்மைகளை மறைத்தல் கூடாது.

2. பிறர் மனம் நோகும்படி எதையும் சொல்லக் கூடாது; செய்யக்கூடாது.

3. எல்லாரும் சமம் என்னும் நோக்கத்தை அனை வரும் கொள்ளவேண்டும். பிறவியினாலோ அல்லது வேறு எந்தக் காரணங்களினாலோ எவரும் உயர்ந்தவர் ஆகார்; தாழ்ந்தவரும் ஆகார்.

4. ஒற்றுமையை வளர்க்கவேண்டும். சாதி, சமய வேறுபாடுகளைத் தலைகாட்ட விடக்கூடாது. வேறுபாடுகள் காட்டும் மனப்பான்மையை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

5. கல்வியில் கருத்தை ஊன்றிப் படித்தல்வேண்டும். கற்றபின், நாட்டில் உள்ள கல்லாதவர்களை எல்லாம் கற்றவர்கள் ஆக்க ஒவ்வொரு மாணவரும் முயலுதல் வேண்டும்.

6. ஒவ்வொரு மாணவரும் தாய்நாட்டுப் பற்றும், தாய்மொழிப் பற்றும் உடையவராக இருத்தல் வேண்டும்.

7. மாணவர் ஒவ்வொருவரும் உடல் நலத்தைக் காத்து, உடலை உரமுடையதாக ஆக்கிக்கொள்ளவேண்டும் ; வைகறையில் துயில் நீங்கி எழுந்து, காலைக்கடன்களை முடித்துக் கொண்டு உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.

8. ஒழுக்கம், அடக்கம், தூய்மை, ஆண்மை, நல்லவர் நட்பு முதலிய நல்ல பண்புகளை ஒவ்வொரு மாணவரும் அடைதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| மகாத்மா | துயரம் | உண்ணு நோன்பு |
| முழுவதும் | சகிக்க | அரையாடை |
| புகழ் | சுகவாழ்வு | அடிமைத்தனம் |
| போற்றுகிறது | உடுப்பு | பண்பு |

## அரும்பொருள்

புகழ் - பெருமை. உரிமை - சுதந்தரம். கற்றவர் - படித்தவர். சாந்தமானவர் - மன அமைதி நிரம்பியவர். துயரம் - துன்பம். நலன்களை - சௌகரியங்களை. அரையாடை - முழங்காலளவு வேட்டி. பற்று - ஆசை.

## கேள்விகள்

1. மகாத்மா காந்தி யார் ?
2. நாம் ஏன் அவரைப் போற்றுகிறோம் ?
3. காந்தியின் தொண்டுகள் யாவை ?
4. அவர் நாட்டிற்குச் செய்த நன்மைகள் எவை ?
5. மகாத்மாவின் குணங்கள் யாவை ?
6. அவர் கூறிய நல்லுரைகள் யாவை ?

## பயிற்சி

I. 1. தெரியாதவர்கள், நாட்டில், புகழ், உலகம், அறிவாளி, உரிமை, கற்றவர், துயரம், உழைக்க, சுகவாழ்வு, அரையாடை, உண்ணு நோன்பு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. இல்லை, அறிவாளி, போற்றுகிறது, நிறைய, கற்றவர், துன்பம், அரையாடை, ஒற்றுமை, அமைதி—எதிர்ச் சொல் கூறு.

3. பொய் பேசக்கூடாது ? தவருக நடக்கக்கூடாது ; மனம் நோகும்படி நடந்து, கல்வியை நன்கு கற்று—இவற்றுள் எவை வாக்கியங்கள் ?

## இலக்கணம்

### பாரா

II. 1. ஒரே பொருள்பற்றிப் பல வாக்கியங்கள் தொடர்ந்து வருகின்றன. அப்படி வருவது பாரா எனப்படும். ஒரே பாராவில் பல பொருள்களைச் சேர்த்து எழுதுதல் கூடாது. பல பொருள்கள் பற்றிக் கூறவேண்டுமானல் பல பாராக்களாகப் பிரித்துவிட வேண்டும்.

2. இப்பாடத்தில் எத்தனை பாராக்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கவனி.

# 5. பனைமரத் தொழில்

1. **பனைமரம்** நமக்குப் பல வகையில் பயன்படுகின்றது. பனைமரத்தால் கிடைக்கும் பொருள்கள் பல. நாம் அவற்றைக்கொண்டு பல நல்ல கைத்தொழில்களைச் செய்யலாம்.



2. சிலர், பனை ஓலையைக்கொண்டு விசிறிகள் செய்கின்றனர்; பாய்கள், தடுக்குகள், கூடைகள் முதலியவைகளை முடைகின்றனர்; வீட்டுக் கூரைகளாகப் பயன்படுத்துகின்றனர்; பனையின் அடிமரத்தைத் துண்டுகளாக வெட்டி வீடுகளுக்குத் தூண்களாகவும், விட்டங்களாகவும் ஆக்குகின்றனர்.

3. பனை நார் கயிறு பின்ன உதவுகிறது. பனைநார்க் கயிறுகள், ஆடு மாடுகளைக் கட்டவும், புரிமணைகள் செய்யவும், மற்றும் பலவற்றிற்கும் பயன்படுகின்றன.

4. பனங்காயிலிருந்து நுங்கு கிடைக்கிறது. கோடைக் காலத்தில் நுங்கு நிறைய விற்பனை ஆகும். நுங்கை வெட்டா

மல், விட்டால், பனங்காய் முற்றிப் பனம்பழமாகும். பனம் பழம் இனிப்பாக இருக்கும். இப்பழத்தில் நார் நிறைய இருப்பதால், கிராமத்தார் இதனைச் சுட்டுப் பிழிந்து, பழச் சத்தை மட்டும் தனியே எடுத்துப் பனாட்டு என்னும் பெயருடன் விற்கின்றனர். பனம்பழமும் விற்கப்படுகிறது. ஏழைகள் இதனை உணவாக உட்கொள்ளுகின்றனர்.

5. பனங்கொட்டையைப் புதைத்தால் சிறிது நாட்க ளுள் முளைக்கத் தொடங்கும். அவ்வமயம் நிலத்திற்கு அடி யில் பனங்கிழங்குகள் இருக்கும். இக்கிழங்குகளில் மாப் பண்டம் மிகுதியாய் இருக்கும். இக்கிழங்கின் மா மிகுந்த வலிமை ஊட்டுவதாம். இக்கிழங்கை மக்கள் நிறைய வாங்கி உண்பார்கள்.

6. பனைமரத்தின் உச்சியில் உள்ள பாளையைச் சீவினால் சாறு வடியும். உட்புறம் சுண்ணாம்பு பூசிய மண் கலயத்தில் இந்தச் சாற்றை வடியவிட்டால், சாறு மிகவும் இனிப்பாக இருக்கும். மக்கள் பனஞ்சாற்றை வாங்கிக் குடிப்பார்கள். இது உடலில் ஏற்படும் சில பிணிகளைப் போக்கிவிடும்.

7. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மக்கள் பனஞ் சாற்றைக் காய்ச்சி நல்ல—வெண்மையான வெல்லம் செய்கின் றனர்; சர்க்கரை, முதற்றரமான கற்கண்டு, பலவகை இனிப்புப் பண்டங்கள் முதலியவைகளையும் செய்கின்றார்கள். நிறையப் பணம் வைத்துப் பெரிய அளவில் இத்தொழிலைச் செய்தால், பனஞ் சர்க்கரை நாட்டிலுள்ளவர் அனைவருக்கும் கிடைக்கும்.

8. பனைமரத்தைக் கொண்டு இன்னும் பலவகையான கைத்தொழில்களைச் செய்யலாம். நம் நாட்டுச் செல்வர்கள் முயன்றால், பனைமரத்தொழில் பெரிய ஆலைத் தொழிலாய் வளரும். நம் நாட்டில் பனைமரங்கள் நிறைய இருக்கின்றன;

நமக்கு உதவி செய்யக் காத்து நிற்கின்றன. அவற்றைப் பயன்படுத்திக் கொள்வது நமது கடமை ஆகும்.

| | | |
|---|---|---|
| பனைஓலை | பழச் சத்து | மண்கலயம் |
| தடுக்குகள் | பனாட்டு | பிணிகள் |
| புரிமணை | பனங்கிழங்கு | முயன்றால் |
| பனம்பழம் | மாப்பண்டம் | ஆலைத்தொழில் |
| நார் | வலிமை | கடமை |

### அரும்பொருள்

புரிமணை - பெரிய சால்களை வைக்க, அடியில் போடுவதற்குரிய வட்டமான பொருள். கோடைக்காலம் - வெய்யிற்காலம். மாப்பண்டம் - மாவு மிகுதியாக இருக்கும் பொருள். வலிமை - பலம். மண்கலயம் - மண்குடுவை. பனாட்டு - பனம்பழச் சத்து. பிணி - நோய். ஆலைத்தொழில் - இயந்திரங்கள் வைத்து நடத்தும் தொழில்.

### கேள்விகள்

1. பனைஓலையைக் கொண்டு என்னென்ன செய்யலாம்?
2. பனைநார் எதற்குப் பயன்படுகிறது?
3. பனம்பழம் எவ்வகையில் பயன்படுகிறது?
4. பனஞ்சாற்றினால் என்னென்ன செய்யலாம்?
5. பனைமரத் தொழிலை ஆலைத்தொழிலாக்குவது எப்படி?

### பயிற்சி

I. பனைஓலை, நுங்கு, நார், பழச்சத்து, ஏழைகள், புரிமணை, சாறு, பிணி, முதற்றரமான, வெண்மையான, செல்வர்கள், முயன்றால், பயன்படுத்தலாம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. பலவற்றிற்கு, ஆகும், நிறைய, இனிப்பாக, ஏழைகள், அடியில், மிகுதி, உச்சியில்—எதிர்ச்சொற்கள் கூறு.

3. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:–

1. கோடைக் காலத்தில் ——— குளிரும்.
2. வெல்லம் ——— கசக்கும்.
3. வேப்பங்காய் ——— வியர்க்கும்.
4. பனிக்காலத்தில் ——— இனிக்கும்.

II. 1. இப்பாடத்தில் வந்துள்ள பாராக்கள் எத்தனை ?

2. இப்பாடத்தில் இரண்டாம் பாராவில் உள்ள ஒருமை பன்மைகளைக் கூறு.

3. இப்பாடத்தில் முதல் பாராவில் எத்தனை வாக்கியங்கள் இருக்கின்றன என்று எண்ணிக் கூறு.

4. தடித்த எழுத்துக்களில் இருப்பவை என்ன சொற்கள் என்பதைக் கூறு :

கூரைமீது இருப்பது ஓடு. நீ விரைவாக ஓடு. நல்ல புத்தகம் படி. ஒரு படி அரிசி கொடு. புத்தகக் கடை வை. மோர் கடை. அவரை விதை விரைவில் முளைக்கும். நெல்லை விதை.

## 6. பனைமரம்

பனைமரமே ! பனைமரமே !
ஏன்வளர்ந்தாய் ? பனைமரமே !
நான்வளர்ந்த காரியத்தை
நாட்டாரே சொல்லுகின்றேன் :
படுக்கைநல்ல பாய்ஆவேன் ;
வசிக்கநல்ல வீடாவேன் ;
வெட்டநல்ல விறகாவேன் ;
வீடுகட்ட மரமாவேன் ;
கட்டநல்ல கயிறுவேன் ;
கன்றுகட்டத் தும்பாவேன் ;
மட்டமுள்ள உறியாவேன் ;
மாடுகட்டத் தும்பாவேன் ;
பலத்தசுமை சால்களுக்குப்
புரிமணையும் நானுவேன் ;
எழுதுகின்ற பிள்ளைகட்கே
எழுத்தாணிக் கூடாவேன் !
ஓதுகின்ற பிள்ளைகட்கே
ஓலைத்தடுக்கும் நானுவேன் ;
நனைந்துவரும் பேர்களுக்கு
நல்லகுடை நானுவேன் ;
பசித்துவரும் பேர்களுக்குப்
பனம்பழமும் நானுவேன் ;
சித்திரைக் கோடையிலே
சிறந்தநல்ல நுங்காவேன் ;

இராமாயணம் என்றுலே !
பாரதமும் என்றுலே ;
வர்த்தகரும் செட்டிகளும்
வழியறிவ தென்றுலே ;
பலசரக்கு மண்டியிலே
பத்திரமாய் நானிருப்பேன் ;
ஏரிக்கரை மீதினிலே
எந்நாளும் வீற்றிருப்பேன்.

—பழைய பாடல்

| | | |
|---|---|---|
| தும்பு | எழுத்தாணி | மண்டி |
| சுமை | கோடை | வீற்றிருப்பேன் |
| சால் | உறி | நாட்டார் |

## அரும்பொருள்

தும்பு - சிறுகயிறு. சால் - பெரிய பானை. எழுத்தாணி - ஓலைகளில் எழுதும் கருவி. சித்திரை - சித்திரை மாதம்.

## கேள்விகள்

1. தும்பாவது எது? கயிராவது எது?
2. பனைமரம் வீடாவது எப்படி ? பாயாவது எப்படி ?
3. பனையால் நல்ல குடை ஆதல் எப்படி ?
4. ‘ பாரதமும் இராமாயணமும் என்றால் ’ என்பது எப்படி ?
5. ‘ பலசரக்கு மண்டியிலே பத்திரமாய் நானிருப்பேன் ’ இதன் பொருள் என்ன ?
6. பனைமரத்தின் இருப்பிடம் யாது ?
7. பனைமரம் பசித்தவர்களுக்கு எவ்வாறு பயன்படுகிறது ?

## பயிற்சி

1. சுமை, பனம்பழம், கோடை, நுங்கு, விறகு, ஓலைத்தடுக்கு, இராமாயணம், பாரதம், ஏரிக்கரை, பலசரக்கு மண்டி, வழி, தும்பு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. இப்பாட்டைப் படித்து, பனைமரத்தால் நாம் அடையும் பலன்கள் குறித்துப் பத்து வரிகள் எழுது.

3. ஏற்றவற்றைச் சேர்த்துப் படி :—

| | |
|---|---|
| 1. கட்ட நல்ல | நுங்காவேன். |
| 2. படுக்க நல்ல | கயிறுவேன். |
| 3. சிறந்த நல்ல | பாயாவேன். |
| 4. வீடுகட்ட | விறகாவேன். |
| 5. கன்றுகட்ட | மரமாவேன். |
| 6. வெட்ட நல்ல | தும்பாவேன். |

## இலக்கணம்

### எழுவாய்—பயனிலை—செயப்படுபொருள்

வரதன் வடையைத் தின்றான் - இது ஒரு வாக்கியம். இதில் தின்றான் என்பது வினைமுற்று. வினைமுற்று - பயனிலை எனவும் கூறப்படும். 'தின்றான்' என்பதன் முன் எவன் அல்லது எது என்பதைச் சேர்த்து, "எவன் தின்றான் ?" என்று கேட்டால், வரதன் என்பது பதிலாக வரும். இவ்வாறு பதிலாக வருவதே எழுவாய் எனப்படும்.

பிறகு, பயனிலையாகிய 'தின்றான்' என்பதோடு யாரை அல்லது எதை என்பதைச் சேர்த்து, "எதைத் தின்றான் ?" என்று கேட்டால், 'வடையைத் தின்றான்' என்பது பதிலாக வரும். எனவே, 'வடை' என்பது செயப்படுபொருள் ஆகும்.



# 7. உடற் பயிற்சி

1. கல்வி கற்பதைப் போலவே உடற்பயிற்சியும் மாண வர்களுக்கு முக்கியமானதாகும். கல்வி கற்பதால் அறிவு வளர்கிறது. உடற்பயிற்சியினுல் உடல் வலிமை பெறுகிறது. எனவே ஒவ்வொரு மாணவனும் அறிவையும் உடல் வலிமை யையும் ஒருங்கே பெறுதல்வேண்டும்.

2. உடல் வலிமை இழந்தால் அடிக்கடி பிணிகள் பற்றும்; கற்பவை கவனத்துக்கு வாரா. ஊக்கமும் சுறு சுறுப்பும் குறைந்து விடும். எதிலும் விருப்பமில்லாமல் எப் பொழுதும் சோம்பலாகவே இருக்க நேரிடும்.

3. இவற்றைப் போக்க, உடல்வலிவு வேண்டும். உடல் வலிவு பெற ஒவ்வொருவரும் உடற்பயிற்சி செய்தல் வேண்டும். உடற்பயிற்சி செய்வதால், உடம்பின் உறுப்பு கள் அசைந்து, இரத்த ஓட்டம் பெருகுகிறது. இதனுல் உடம்பினுள் இருக்கும் அழுக்கு, வியர்வையாக வெளி வந்து

விடும். இரத்தம் தூய்மை பெறும். உடலின்மேல் உள்ள அழுக்குகளைப் போக்க நாம் தினந்தோறும் குளிக்கிறோம் அல்லவா? அதைப்போலவே, உடம்பிற்குள் இருக்கும் அழுக்கைப் போக்கத் தினந்தோறும் நாம் உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

4. பள்ளிக்கூடங்களில் கல்வி கற்பிப்பது போல, உடற்பயிற்சிகளும் கற்பிக்கின்றார்கள் அல்லவா? மாணவர்களுடைய வயதுக்கும் உடல் வன்மைக்கும் ஏற்றவாறு ஒவ்வொருவரும் உடற்பயிற்சி செய்யவேண்டும். வளரும் பருவத்தில் பிள்ளைகள் உடற்பயிற்சி செய்தால், உடல் நல்ல வலிமையுடன் வளரும்; பிணிகள் அகலும்; மனத்தெளிவு உண்டாகும்.

5. உடற்பயிற்சி பல வகைப்படும். உடற்பயிற்சி வகைகள் எல்லாவற்றையும் எல்லோரும் செய்ய முடியாது. மாணவர்களாகிய நீங்கள் செய்யக்கூடிய உடற் பயிற்சிகள் சில இருக்கின்றன. நீங்கள் அவற்றைத் தினந்தோறும் செய்தல்வேண்டும்.

6. மாலை நேரத்தில், பள்ளிக்கூடத்தில் கைகளை உயர்த்தியும் நீட்டியும் பரப்பியும் குனிந்தும் நிமிர்ந்தும் நீங்கள் உடற்பயிற்சி செய்கின்றீர்கள் அல்லவா? இவை தவிர, பள்ளிக்கூடத்திலேயே பலவகை விளையாட்டுகளிலும் நீங்கள் ஈடுபடுகிறீர்கள்.

7. இதேபோலப் பந்தாட்டம், ஓட்டம், தோப்புக்கரணம், சடுகுடு ஆடுதல் முதலியவை உடற்பயிற்சி விளையாட்டுகளே ஆகும். இவற்றினால் உடலின் தசைகள் அசைவு பெற்று, இரத்த ஓட்டம் பெருகி, வியர்வை வெளிப்படும்.

8. வியர்வை வெளிப்படக் கூடியவாறுள்ள உடற் பயிற்சிகளை நீங்கள் செய்தால், இரத்தத்திலுள்ள மாசுகள் அனைத்தும் வியர்வை மூலம் வெளிப்படும்.

9. நடப்பதும் ஒரு சிறந்த உடற்பயிற்சி. இதனை எல்லோரும் எந்த இடத்திலும் பழகலாம். ஒரே அளவான வேகத்தில் நடந்து செல்வதால், உடல் உறுப்புகள் ஒரே அளவில் அசைவு பெற்று இரத்த ஓட்டத்தைப் பெருக்கும்.

10. நல்ல காற்றேட்டமும் வெளிச்சமும் உள்ள இடங்களில் உடற்பயிற்சி செய்யவேண்டும். எனவே, மாணவர்களாகிய நீங்கள் உங்களுக்கு ஏற்ற உடற்பயிற்சிகளை நாள்தோறும் தவறுமல் செய்து வரவேண்டும். இதனால் நீங்கள் உடல்வலிமையும் மனவலிமையும் பெறுவீர்கள்.

## நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

| | | |
|---|---|---|
| கற்பது | இரத்த ஓட்டம் | குனிந்து |
| ஒருங்கே | அழுக்கு | நிமிர்ந்து |
| சுறுசுறுப்பு | நீட்டி | தோப்புக்கரணம் |
| சோம்பல் | உயர்த்தி | சடுகுடு |

### அரும்பொருள்

ஒருங்கே - ஒரே சமயத்தில். தூய்மை-சுத்தம். மாசு - அழுக்கு.

### கேள்விகள்

1. உடற்பயிற்சி எப்படி முக்கியமானதாகும்?
2. உடல் வலிமை இழந்தால் என்ன நேரிடும்?
3. உடற்பயிற்சியினுல் ஏற்படும் நன்மை என்ன?
4. நீ செய்யக்கூடிய உடற்பயிற்சிகள் எவை?
5. உடற்பயிற்சி எங்கு—எப்பொழுது செய்யவேண்டும்?

### பயிற்சி

I. 1. உடற்பயிற்சி, தோப்புக்கரணம், சடுகுடு, வியர்வை, இரத்த ஓட்டம், வலிவு, அழுக்கு, குளிக்கிறேம், சுறுசுறுப்பு, ஊக்கம், வெளிச்சம், பந்தாட்டம், காற்றேட்டம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. உனக்கு விருப்பமான உடற்பயிற்சிகள் நான்கினைக் கூறு.

3. குளி - குழி, பள்ளி - பல்லி, வன்மை - வண்மை, நீங்கள்-நீங்கல், மலை - மழை, மனம் - மணம்—இவற்றிற்குப் பொருள் கூறு.

4. திருத்தி எழுது :—

மாலை நேறத்தில் பல்லிக்கூடத்தில் கைகலை உயற்தியும் நீட்டியும் பறப்பியும் குணிந்தும் நிமிற்ன்தும் நீங்கள் உடள்பயிர்சி செய்கின்றீர்கல் அள்ளவா ?

II. 1. முதற்பாராவில் உள்ள ஒருமை-பன்மைகளைக் கூறு.

2. இரண்டாவது பாராவில் உள்ள பெயர்ச் சொல், வினைச் சொற்களை எழுது.

3. மூன்ருவது பாராவில் உள்ள எ. ப. செ. கூறு.

4. இப்பாடத்தில் எத்தனை பாராக்கள் வந்துள்ளன என்பதைக் கவனி.



## 8. இக்காலப் பாவலர்

1. 'ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா,' என்ற பாட்டை நீங்கள் படித்திருக்கிறீர்கள். இதைப் பாடியவர் **சுப்பிரமணிய பாரதியார்.** இவர் எட்டையபுரத்தைச் சேர்ந்தவர். உணர்ச்சி ஊட்டும் பல அழகிய பாக்களை இவர் பாடியுள்ளார். இவர் பாடிய பாக்கள் பலவற்றை நீங்கள் படித்திருப்பீர்கள். இன்று பள்ளிக்கூடத்தில் பாடும் நாட்டு வாழ்த்துப் பாடலும் இவர் பாடியதே. இவர் நம்நாட்டுக் கவியரசர் எனப் போற்றப்படுகிறார். இவர் 1921-ஆம் ஆண்டில் காலமானார். இவருக்கு எட்டையபுரத்தில் நினைவுச் சின்னம் அமைக்கப் பட்டிருக்கிறது. இவருடைய பாட்டுகளை யெல்லாம் சென்னை அரசாங்கம் விலைக்கு வாங்கி நாட்டுக்குப் பொதுச் சொத்தாய்ச் செய்திருக்கிறது.

2. உணர்ச்சிபெறப் பாடும் வன்மை பெற்ற மற்றொரு கவியரசர் **பாரதிதாசன்** என்னும் பெயர் பூண்ட கனக-

சுப்புரத்தினம் ஆவார். இவருடைய செந்தமிழ்ப் பாட்டுகள் கருத்தும் சுவையும் மிகுந்தவை. இவர் புதுச்சேரியைச் சேர்ந்தவர். இவர் சுப்பிரமணிய பாரதியாரின் மாணவர். அதனல் இவர் தம் பெயரைப் பாரதிதாசன் என்று வைத்துக் கொண்டார். இவருடைய கவிதைகளை நீங்கள் படித்திருப்பீர்கள். இவர் விரைவில் பாக்கள் புனேயும் ஆற்றல் உடையவர். சுவை மிகுந்த இவருடைய கவிகளைப் படித்தறிந்த பொது மக்கள் இவருக்குப் பொன் சரிகைகளால் நெய்யப்பட்ட பொன்னுடை போர்த்து, பண முடிப்புத் தந்து பெருமைப்படுத்திஞர்கள். இவர் இன்றும் புதுச்சேரியில் வாழ்கிருர்; பாக்கள் பலவற்றை நூல்கள் வடிவில் வெளியிட்டு வருகிருர்.



3. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை என்பவர் நாகர்கோவிலைச் சேர்ந்த கவிஞர் ஆவர். இவர் பாட்டுகளையும் நீங்கள் படித்திருக்கிறீர்கள். இவருடைய பாட்டுகளும் சுவை மிகுந்தவை; கருத்துடையவை. இவர் ஆறு, மலை, கடல் முதலிய இயற்கைப் பொருள்களைப் பற்றி மிகவும் அழகாய்ப் பாட வல்லவர். இவர் ஆராய்ச்சியிலும் மிகச் சிறந்தவர். வயது முதிர்ந்த இப்பெரியார் இன்று நாகர்கோவிலில் இருந்து வருகிருர்; தமிழ் கவிகளைப் பாடி வருகிருர். இவர் சுப்பிரமணிய பாரதியாரின் நண்பர்.





4. இன்று சென்னை அரசாங்க அவைப் புலவராக அமர்ந்திருப்பவர் நாமக்கல் **இராமலிங்கம் பிள்ளை** என்பவர். இவரும் பல இனிய பாட்டுகளைப் புனைந்திருக்கிருர். இவருடைய கவிதைகள் சுப்பிரமணிய பாரதியார் பாக்களைப் போன்று தேசீய மணம் பெற்று விளங்குகின்றன. இவர் காந்தியடிகளின் கொள்கைகளைத்தழுவியவர் ; நாமக்கல் என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவருடைய கவிதைகளைப் பாராட்டிப் பொது மக்கள், இவருக்குப் பணமுடிப்புத் தந்தனர்.

5. இந்த நான்கு பாவலர்களும் இக்காலப் பாவலர்களிடையே மிகவும் சிறந்தவர்கள். பாரதியார் தவிர, மற்றைய மூவரும் இன்று நம்மிடை இருந்து தமிழ்த் தொண்டு செய்து வருகின்ருர்கள். இவர்களுடைய பாக்கள் பெரும்பாலும் எல்லாத் தமிழ்ப் பாட புத்தகங்களிலும் வருகின்றன; நாடகம், திரைப்படக் காட்சி, இசையரங்கு, முதலிய இடங்களிலும் பாடப்படுகின்றன. இவர்கள் பாடியுள்ள பாட்டுகள் அனைத்தும் மக்களைச் செம்மையான வழியில் செலுத்தவல்லவை ; உணர்ச்சி ஊட்டவல்லவை.

| | | |
|---|---|---|
| ஓய்ந்திருக்கலாகாது | சொத்து | பணமுடிப்பு |
| ஊட்டும் | செந்தமிழ் | திரைக்காட்சி |
| பாக்கள் | புனையும் | இசையரங்கு |
| நினைவுச்சின்னம் | பொன்னுடை | அவைப்புலவர் |

### அருஞ்பொருள்

சின்னம் - அடையாளம். கவிதைகள், பாட்டுகள், பாக்கள், கவிகள் - ஒரு பொருட் சொற்கள். புனையும்- பாட்டைக்கட்டும் இக்

காலம் - இந்த நூற்றுண்டு. ஆற்றல் - திறமை. பொன்னுடை - பொன் சரிகைகளால் நெய்யப்பட்ட ஆடை. திரைப்படக்காட்சி - சினிமா. இசையரங்கு - சங்கீதக்கச்சேரி.

## கேள்விகள்

1. கவியரசர் சுப்பிரமண்ணிய பாரதியார் யாவர் ?
2. நீ பாரதிதாசன் என்பவரைப்பற்றி என்ன அறிவாய் ?
3. பாரதிதாசன் என்னும் பெயர் வரக் காரணம் யாது ?
4. பொன்னுடை, பணமுடிப்பு—என்பன யாவை ?
5. நாகர்கோவிலைச் சேர்ந்த பாவலர் யாவர் ?
6. நீ அவரைப்பற்றி யாது அறிவாய் ?
7. சென்னை அரசாங்க அவைப்புலவர் யாவர் ?
8. நீ அரைப்பற்றி அறிந்தவற்றை எழுது.

## பயிற்சி

1. உணர்ச்சி, பாக்கள், நாட்டுக்கவி, பொதுச்சொத்து, செந்தமிழ், மாணவர், புனையும், ஆற்றல், போர்த்து, பணமுடிப்பு, சுவை, தமிழ்த்தொண்டு, கொள்கை—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. இப்பாவலர்கள் பாடிய பாக்களில் ஒவ்வொன்றை எடுத்து எழுது.

3. எது சரி? சரியாக அமை :—

| | |
|---|---|
| பாட்டைப் | படிக்கிறோம் |
| ஆணி | பாடுகிறோம் |
| பாடம் | அடிக்கிறோம் |
| தண்ணீர் | குத்துகிறோம் |
| பாலில் புரை | ஊற்றுகிறோம் |

4. இவற்றைப் படி :—

| | | | | |
|---|---|---|---|---|
| உணர்ச்சி | + | ஊட்ட | = | உணர்ச்சியூட்ட |
| கவி | + | அரசர் | = | கவியரசர் |
| படித்து | + | இருப்பீர்கள் | = | படித்திருப்பீர்கள் |

5. இவருடைய, தன்மையுடையவை, பொன்னுடை, புனைந் திருக்கிறார், இசையரங்கு—இவற்றைப் பிரித்துக் கூறு.

6. போவாள், வருவாள், கண்ணன், இசையரசி, ஆடினாள், புகழேந்தி, சிரித்தான்—இவற்றிலுள்ள பெயர்ச் சொற்களையும், வினைச் சொற்களையும் பிரித்து எடுத்து எழுது.

## இலக்கணம்

### தோன்றா எழுவாய்

உட்கார், நில், ஓடு சாப்பிடு—என்பவை ஒரே வார்த்தையில் கருத்தைத் தெரிவிப்பவை. இவை நீ உட்கார், நீ நில், நீ ஓடு, நீ சாப்பிடு என்றிருக்க வேண்டும். நீ உட்கார் என்பதில் நீ என்பது எழுவாய். உட்கார் என்பது பயனிலை. இங்கே உட்கார் என்னும் பயனிலை மட்டும் இருக்கிறது. நீ என்னும் எழுவாய் இல்லை. ஆகவே, இவ்வாறு எழுவாய் இல்லாமல் மறைந்து வரும் இடங்களில் நீ என்பதைத் தோன்றா எழுவாய் என்று கொள்ள வேண்டும்.

1. முருகனுக்கு ஓர் அணா கொடு.

2. தோட்டத்திற்குச் சென்று பூப்பறித்து வா.—இந்த வாக்கியங்களில் எழுவாய் எவை?




## 9. பத்திரிகைச் செய்திகள்

1. பிள்ளைகளே, நம் நாட்டு அரசாங்கச் செய்திகள், பிறநாட்டு அரசாங்கச் செய்திகள், உலக வாணிகம் பற்றிய செய்திகள், தங்கம், பலவகை எண்ணெய்கள், பஞ்சு முதலிய பல பொருள்களின் அன்றாட விலைகள், நமது மாகாணத்தில் சென்னையிலிருந்து பல பக்கங்களுக்கும் புறப்பட்டுச் செல்லும் புகைவண்டிகளின் கால அட்டவணை, உலகச் செய்திகள் முதலியவற்றை நாள்தோறும் வெளியிடும் தாள்கள் **நாள் செய்தித் தாள்கள்** எனப்படும். வாரத்திற்கு ஒரு முறை, பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை, மாதத்திற்கு ஒரு முறை வெளிவரும் செய்தித் தாள்களும் உண்டு.

2. நாம் செய்தித்தாள்களை ஏன் படிக்கவேண்டும்? முன் சொன்னபடி, செய்தித் தாள்களில் அரசாங்கக் கட்டளைகள், சட்ட திட்டங்கள், பொருள்களின் விலைப்பட்டிகள், நாட்டின் பல பகுதிகளில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகள், உலகச் செய்திகள், கதைகள், அபூர்வமான செய்திகள் முதலியன

வெளிவரும். நாம் அவற்றைப் படிப்பதால் இத்தனை விஷயங்களையும் அறிந்துகொள்ளுகிறோம். இதனால் நமது அறிவு வரவர வளர்ச்சி அடையும். நாம் நாள்தோறும் உலகச் செய்திகளை அறிகிறோம். நாம் வாழ்கின்ற இந்த உலகத்தில் நடைபெறும் அன்றாடச் செய்திகளை அறியவேண்டுவது நமது கடமை அல்லவா ?

3. தமிழில் "தினமணி," "தினசரி," "சுதேசமித்திரன்", "தினத் தந்தி", "தினச் செய்தி", "பாரத தேவி" முதலிய செய்தித் தாள்கள் நாள்தோறும் வெளிவருகின்றன. நீங்கள் அவற்றைத் தினந்தோறும் படியுங்கள் ; உங்களுக்குத் தேவைப்படும் செய்திகளை ஒரு தனி நோட்டுப் புத்தகத்தில் குறித்து வையுங்கள் ; சிலவற்றைக் கத்தரித்து நோட்டுப் புத்தகத்தில் ஒட்டிவையுங்கள். அவை கட்டுரை எழுதும்பொழுதும் கூட்டங்களில் பேசும்பொழுதும் ஆதாரம் காட்டி எழுதவோ, பேசவோ பயன்படும்.

4. நீங்கள் ஒட்டிவைக்கத்தக்க சில மாதிரிச் செய்திகள் இங்குத் தரப்பட்டுள்ளன. அவற்றைப் படித்துப் பாருங்கள்; அவைபோல முக்கியமானவற்றைச் சேருங்கள்.

### 1. மோட்டார் சைக்கிள் உற்பத்தி

அமெரிக்காவில் இவ்வாண்டில் (1949-இல்) முதல் எட்டு வாரங்களில், 42 லட்சத்து 31 ஆயிரம் மோட்டார் சைக்கிள் வண்டிகள் செய்யப்பட்டன. அவற்றுள் 2 லட்சத்து எட்டாயிரம் வண்டிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டன. (27–10–'49)

## 2. நமது மாகாணத்தில் செய்யப்படும் சர்க்கரை அளவு

" நமது மாகாணத்திற்கு வேண்டும் சர்க்கரையில் பாதி தான் இங்குள்ள சர்க்கரைத் தொழிற்சாலைகளில் தயாரிக்கப் படுகிறது. அடுத்த பாதி ஐக்கிய மாகாணம், பீகார் மாகாணம் இவற்றிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது " என்று நமது மாகாண உணவு மந்திரி கூறினார். (15-11'49)

| | | |
|---|---|---|
| தங்கம் | செய்தித்தாள் | ஆதாரம் |
| பஞ்சு | விலைப்பட்டி | டன் |
| அன்றாட | நாள்தோறும் | ஏற்றுமதி |
| அட்டவணை | கத்தரித்து | இறக்குமதி |

### அருஞ்பொருள்

வாணிகம் - வர்த்தகம். அன்றாடம் - தினந்தோறும். கால அட்டவணை - வண்டிகள் புறப்படும் நேரத்தைக் காட்டும் விவரம். செய்தித்தாள் - பத்திரிகை. டன் - 2240 ராத்தல் கொண்ட எடை அளவு. ஏற்றுமதி - நம் நாட்டுப் பொருள்களை வெளி நாடுகளுக்கு அனுப்புவது. இறக்குமதி - வெளி நாடுகளிலிருந்து பொருள்கள் நம் நாட்டில் வந்திறங்கச் செய்வது.

### கேள்விகள்

1. நாம் நாள் செய்தித்தாள் மூலம் என்னென்ன அறியலாம்?
2. செய்தித்தாள்களைப் படித்தால் கிடைக்கும் பலன் யாது ?
3. நாள்தோறும் வெளிவரும் செய்தித்தாள்கள் யாவை ?
4. நீ செய்தித்தாளைப் படித்தபின் யாது செய்தல் வேண்டும்?
5. நீ மாதிரிச் செய்திகளிலிருந்து அறிபவை யாவை ?

### பயிற்சி

1. உனக்குத் தெரிந்த வார, மாதச் செய்தித்தாள்களின் பெயர்களை எழுது.

2. அரசாங்கச் செய்திகள், வாணிகம், அன்றாட விலை, பஞ்சு, புகைவண்டி, கால அட்டவணை, செய்தித்தாள், விலைப்பட்டி, கதை, வளர்ச்சி, கத்தரித்து, கட்டுரை, ஆதாரம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. பிழைகளைத் திருத்து :—பில்லைகலே, எண்ணை, விளைப் பட்டி, அரிவு, வறவற, வலற்ச்சி, பெருகிறது, ஞம் வாளுகின்ர இன்த, உளகம்.

4. பொருள் கூறு :—பில்லை - பிள்ளை, விலை - விளை, அரி - அறி, பெரும் - பெறும், வாழ் - வாள், தன்மை - தண்மை, உன் - உண், என் - எண்.

## இலக்கணம்

## ஆறுவகைப் பெயர்கள்

பெயர்ச்சொல் ஆறுவகைப்படும்.

1. பொருட் பெயர்—இது பொருள்களின் பெயரை உணர்த்தும்.
   (உ - ம்.) மரம், ஆடு, மனிதன், கிளி.
2. இடப் பெயர்—இது இடங்களின் பெயர்களை உணர்த்தும்.
   (உ - ம்.) பள்ளிக்கூடம், வீடு, கடல், மலை, தஞ்சாவூர்.
3. காலப் பெயர்—இது காலத்தை உணர்த்தும்.
   (உ - ம்.) பகல், இரவு, திங்கள், வருடம், பங்குனி.
4. சினைப் பெயர்—இது உறுப்புகளை உணர்த்தும்.
   (உ - ம்.) தலை, மூக்கு, பூ, கிளை, கண்.
5. குணப் பெயர்—இது குணங்களை உணர்த்தும்.
   (உ - ம்.) உண்மை, அன்பு, வெண்மை.
6. தொழிற் பெயர்—இது தொழிலை உணர்த்தும்.
   (உ - ம்.) செய்தல், படித்தல், பொங்கல், பாடுதல்.

எனவே பெயர் ஆறு வகைப்படும்.

# 10. கிராமமும் நகரமும்

(உரையாடல்)

**முருகன் :**—கண்ணா, உங்கள் கிராமத்தில் எங்கள் நகரத்தில் இருப்பதைப்போல மாடிவீடுகள் இல்லை; பெரிய கடைத்தெரு இல்லை; உத்தியோக நிலையங்கள் இல்லை; படக்காட்சி இல்லை; வானொலி நிலையம் இல்லை. இந்த நிலையில் உங்கள் கிராமம் உயர்ந்ததா? எங்கள் நகரம் உயர்ந்ததா?

**கண்ணன்:**—முருகா நீ இதுவரை சொன்னவை எங்கள் கிராமத்தில் இல்லை என்பது உண்மையே. எங்கள் கிராமத்தில் உள்ள சுத்தமான காற்று இங்கு உண்டா? சூரிய வெளிச்சம் படாத வீடுகளைக் கிராமத்தில் பார்க்க முடியாதே! சுத்தமான காற்றும் சூரிய வெளிச்சமும் நமது சுகவாழ்க்கைக்கு முக்கியமானவை அல்லவா?

**முருகன் :**—நீ சொன்னவை உண்மையான செய்திகள். நகர வீடுகளில் பலவற்றில் சுத்தமான காற்றும் சூரிய வெளிச்சமும் போதுமான அளவு இல்லை என்பது உண்மையே. இங்கு மின்சார விளக்குகள் எரிவதைப் பார்; வானொலியில் உலகச் செய்திகள் பரப்பப் படுகின்றன, கேள். இவை உங்கள் கிராமத்தில் இல்லை அல்லவா?

**கண்ணன் :**—ஆம்; இவை எங்கள் கிராமத்தில் இல்லை. இவை விரைவில் எல்லாக் கிராமங்களிலும் ஏற்படலாம். இப்பொழுது கிராமங்களில் பள்ளிகள் திறக்கப் படுகின்றன; கிராம முன்னேற்ற வேலைகள் நடந்து வருகின்றன. இன்னும் சில ஆண்டுகளில் கிராமத் திற்கும், நகரத்திற்கும் மிகுந்த வேறுபாடு காணப்

படாது. ஆனால், முருகா, கிராமமே நாடு என்னும் உடம்பிற்கு முதுகெலும்பு என்பதை நினைவில் வை.

முருகன் :—என்ன, முதுகெலும்பா ? அது எப்படி ?

கண்ணன் :—கிராமத்தில்தான் நன்செய், புன்செய் நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களில்தாம் நாட்டு மக்களுக்கு வேண்டும் எல்லா உணவுப் பொருள்களும் பயிராகின்றன. அவற்றைப் பயிர் செய்பவர் யார் ? கிராம மக்கள். கிராமத்தார் இராப்பகலாக உடல் வருந்த உழைத்து நிலங்களை உழுகின்றனர் ; தண்ணீர் பாய்ச்சுகின்றனர் ; தக்க எருக்களைப் போடுகின்றனர் ; விதைகளை விதைக்கின்றனர் ; பயிர்களை வளர்க்கின்றனர் ; தானியங்களை அறுவடைசெய்து நகரங்களுக்கு அனுப்புகின்றனர். அவர்கள் இவ்வாறு உழைக்காவிட்டால், நகர மக்கள் எவ்வாறு உணவுப் பொருள்களைப் பெறமுடியும் ? துணி நெய்தல், மண் பாண்டங்கள் செய்தல், உலோகப் பொருள்களைச் செய்தல், மரவேலை செய்தல், தென்னைமரத் தொழில், காய்கறிகளைப் பயிராக்கல் முதலிய தொழில்களைக் கிராம மக்களே செய்கின்றார்கள். அவர்கள் தொழில்களைச் செய்து, பொருள்களை உண்டாக்கி, நகரங்களுக்கு அனுப்புவதால், நகரவாசிகள் சுகமாகக் காலங்கழிக்கிறார்கள் ; மற்ற வேலைகளில் ஈடுபடுகிறார்கள். நாட்டு மக்கள் உயிர் வாழ உணவு தேவை. அந்த உணவை உண்டாக்கித் தருபவர் கிராம மக்கள். ஆதலால் நகர மக்கள் கிராமமக்களை இழிவாய் நினைக்கலாகாது ; அவர்களை மரியாதையாய் நடத்தவேண்டும்.

முருகன் :—கண்ணா, நான் இன்றுதான் கிராமத்தின் பெருமையை உணர்ந்தேன். உழவையும் கைத்தொழிலை

யும் வளர்க்கும் கிராம மக்களைப் பாராட்டவேண்டுவது நகரத்தார் கடமையாகும்.

| | | |
|---|---|---|
| நிலையங்கள் | வேறுபாடு | அறுவடை |
| வானொலி | முதுகெலும்பு | இழிவாய் |

### அரும்பொருள்

வானொலி - ரேடியோ. வேறுபாடு - வித்தியாசம்.

### கேள்விகள்

1. கிராமத்தில் இல்லாமல் நகரத்தில் மட்டும் இருப்பவை யாவை ?
2. நகரத்தில் இல்லாமல் கிராமத்திலிருப்பவை யாவை ?
3. வாழ்க்கைக்கு முக்கியமானவை யாவை ?
4. எது எதற்கு முதுகெலும்பு ? விளக்கிக் கூறு.
5. கிராமத்தால் நகரமக்கள் அடையும் பலன் யாது ?
6. கிராம மக்களை எவ்வாறு நடத்தவேண்டும் ? ஏன் ?

### பயிற்சி

I. 1. மாடிவீடு, வானொலி நிலையம், சுத்தமான காற்று, பார்க்க முடியாது, சூரிய வெளிச்சம், உணவுப் பொருள்கள், அறுவடை, முதுகெலும்பு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. இருப்பதை, கிராமம், உயர்ந்ததா, உண்டு, முடியாது, வெளிச்சம், உண்மையான, பலவற்றில், திறக்கப்படும், பெருமை —எதிர்ச் சொற்கள் கூறு.

II. 1. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள எ. ப. செ. இவற்றைக் கட்டத்தில் அமைத்து எழுது :—

(1) கிராமத்தார் நிலங்களை உழுகின்றனர்.

(2) உழவர்கள் வயலுக்கு நீர் பாய்ச்சுகின்றனர்.

(3) சிறு கிராமத்தில் திரைப்படக் காட்சி இல்லை.
(4) வானொலி மக்களுக்கு இன்பம் அளிக்கிறது.
(5) நகரத்தில் நல்ல காற்று இல்லை.
(6) நன்றாக ஓடி விளையாடு.

| எண் | எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |

2. இப்பாடத்தில் வரும் ஆறுவகைப் பெயர்களையும் எடுத்துக் கூறு.

3. கிராமம், வயல், பயிர், மாடிவீடு, காற்று, இரவு, எரிதல், விதைகள், நெய்தல், செய்தல்—இவை என்னென்ன பெயர்கள் ?

# 11. பொத்தான் செய்தல்

1. கல்வி கற்பதால் அறிவு வளரும். கைத்தொழில் கற்பதால் வாழ வழி தெரியும். இவ்விரண்டையும் சேர்த்துப் பள்ளிகளில் கற்பித்தால், அறிவும் வளரும் ; பிழைக்க வழியும் பிறக்கும். இத்தகைய கல்வி முறையே சிறந்தது ஆகும்.

2. இவ்வகையாக கல்வியையும் கைத்தொழிலையும் சேர்த்துக் கற்பிக்கும் பள்ளிகள் மிகச் சில. அவற்றுள் ஒன்று வாலாஜாபாத்திலுள்ள இந்து மத பாடசாலை ஆகும். அப்பள்ளியில் மாணவர்களுக்குக் கல்வியுடன் கைத் தொழில்கள் பல கற்பிக்கப்படுகின்றன.

3. அச்சுத் தொழில், பயிரிடுதல், நெசவு, புத்தகம் கட்டுதல், மாட்டுக் கொம்பில் பாயும் புலி - பறக்கும் பறவை - வாடியிருக்கும் கொக்கு முதலியவை செய்தல், மரப்பலகையில் பிள்ளைகள் விரும்பும் விளையாட்டுப் பொருள்கள் செய்தல், பொத்தான் செய்தல் முதலிய பல வகையான கைத் தொழில்கள் அங்குக் கற்பிக்கப்படுகின்றன. இதனால், பள்ளியில் படித்துவிட்டு வெளியில் செல்லும் பிள்ளைகள் கைத்தொழில் தெரிந்தவராகின்றனர். மேற் படிப்புப் படிக்க முடியாத பிள்ளைகளுக்குக் கைத்தொழிற் படிப்பு, வாழ்க்கைக்கு ஒரு வழி காட்டியாக அமைகிறது.

4. மேற்சொன்ன கைத்தொழில்களில் பொத்தான் செய்யும் தொழிலைப் பற்றி இங்குக் கவனிப்போம். பொத்தான் செய்வதற்கு வேண்டியவை சிறு மரத்துண்டுகள், வண்ணங்கள், சிற்றுளிகள் சில, காலினால் மிதித்துச் சுழற்றும் உருளைக் கட்டை. இவற்றினை மிகவும் குறைந்த பணச் செலவில் பெறமுடியும்.

5. உறுதியான மரக்கழிகள் கொண்டுவந்து அவற்றைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, உளியால் உருவாக்கி வைத்துக் கொள்ளவேண்டும். (படம் 1 பார்)



படம் 1



படம் 2

6. நறுக்கி உருவாக்கிய சிறு மரத்துண்டை உருளைக் கட்டையில் இணைத்து, உருளைக்கட்டையை விரைவாகச் சுழலச் செய்து, சிற்றுளிகள்கொண்டு கடைந்தால் அம் மரத் துண்டு பொத்தான் வடிவத்தை அடைகிறது. ஒரு சிறு மரத்துண்டில் நான்கைந்து பொத்தான்கள் செய்யலாம். (படம் 2 பார்)



படம் 3

7. இவ்வாறு பொத்தான்களைக் கடைந்த பிறகு பளபளப்புத் தரப்படுகிறது. அதன்பின் தேவைப்படும் வண்ணங்கள் தீட்டப்படுகின்றன. (படம் 3 பார்)

8. இவ்வண்ணம் பலவகையான அழகான பொத்தான்களை வாலாஜாபாத் பள்ளியில் மாணவர்கள் விரைவாகச் செய்கின்றனர்.

9. மாணவர்கள் இத்தகைய கைத்தொழில்கள் பல வற்றைக் கற்றுக் கொள்ளவேண்டும். கல்வியுடன் கைத் தொழில்களைக் கற்பது நல்வாழ்வுக்கு வழி தேடிக்கொள்வ தாகும்.

| | | |
|---|---|---|
| கைத்தொழில் | பாயும்புலி | வண்ணங்கள் |
| பிழைக்க | பறவை | சிற்றுளி |
| பிறக்கும் | கொக்கு | சுழற்றும் |
| வாலாஜாபாத் | விளையாட்டு | உருளைக்கட்டை |
| அச்சுத்தொழில் | பொத்தான் | நறுக்கி |
| நெசவு | வழிகாட்டி | நல்வாழ்வு |

## அரும்பொருள்

அச்சுத்தொழில் - அச்சடிக்கும் தொழில். நெசவு - துணி நெய்யும் தொழில். வண்ணங்கள் - நிறங்கள்.

## கேள்விகள்

1. கல்வியும் கைத்தொழிலும் கற்பதால் கிடைக்கும் பலன் யாது ?
2. வாலாஜாபாத் பள்ளியில் கற்பிக்கும் கைத்தொழில்கள் யாவை ?
3. பொத்தான் செய்வதற்கு வேண்டியவை யாவை ?
4. பொத்தான் செய்வது எப்படி ?
5. நல்வாழ்வுக்கு நீங்கள் என்ன செய்யவேண்டும் ?

## பயிற்சி

I. 1. நீ விரும்பும் கைத்தொழில் ஒன்றைப் பத்து வரிகளில் விளக்கி எழுது.

2. உன் பள்ளியில் கற்பிக்கப்படும் கைத்தொழில்களில் உனக்கு விருப்பமானது எது ? காரணத்துடன் கூறு.

3. பிழைக்கவழி, கல்வியும் கைத்தொழிலும், நெசவு, வண்ணங்கள், பளபளப்பு, மிதித்து, நல்வாழ்வு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

4. பொருள் கூறு :—புலி - புளி, பறவை - பரவை, வழி - வலி, மரம் - மறம், கழி - களி.

5. பளபளப்பு—இரட்டைச்சொல். இதுபோல் நான்கு இரட்டைச் சொற்களைக் கூறு.

II. கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்களை இன்னின்ன பெயர்கள் எனப் பின் உள்ள கட்டங்களில் பொருத்திக் காட்டு :—

1. சிதம்பரத்தில் மாமரங்கள் மிகுதியாக இருக்கின்றன.
2. புளியமரத்தின் கிளைகள் உறுதியானவை.
3. புளியங்கொட்டையும் மாங்கொட்டையும் துவர்க்கும்.
4. மாவிலை பச்சை நிறமுடையது.
5. பொங்கல் தின்பதற்கு நன்ருக இருக்கும்.
6. சித்திரை மாதம் சென்னையில் வெப்பம் கடுமையாய் இருக்கும்.

| எண் | பொருள் பெயர் | இடப் பெயர் | காலப் பெயர் | சினைப் பெயர் | குணப் பெயர் | தொழிற் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |
| 6 | | | | | | |

## 12. அல்லி அரசி கொலு

முத்து மிதியடியைத் தொட்டு மிகநடந்து,
மாணிக்கக் கிரீடங்கள் மகுட முடிதுலங்க
தாதியர்கள் சூழ்ந்துவர, தனிக்கவரி வீசிவர,
மாதர்கள் புடைசூழ மண்டபம்சென் றேறினள்.
ஓராம் படித்தளமாம் ஓலைப்பூ மண்டபமாம்
இரண்டாம் படித்தளமாம் இரத்னகிரி மேடைகளாம்
மூன்றும் படித்தளமாம் முத்துப்பொன் படிவாசல்
நான்காம் படித்தளமாம் நவரத்ன மண்டபமாம்
ஐந்தாம் படித்தளமாம் அரக்குமணி மேடைகளாம்
ஆறும் படித்தளமாம் அழகான மேடைகளாம்
ஏழாம் படித்தளமாம் எழிலான மண்டபமாம்
எட்டாம் படித்தளமாம் எண்ணெய்க்கால் மண்டபமாம்
ஒன்பதாம் படித்தளமாம் ஓலைப்பூச் சாவடியாம்
பத்தாம் படித்தளமாம் பளிங்குமா மண்டபமாம்
ஆயிரக்கால் மண்டபத்தில் அல்லிராணி வந்தமர்ந்தாள் ;
செம்பொன் முடிதுலங்கத் திருக்கோயில் வந்தமர்ந்தாள்.

—அல்லி அரசி மாலை

| | | |
|---|---|---|
| கொலு | கவரி | கிரி |
| தொட்டு | புடைசூழ | நவரத்னம் |
| மாணிக்க | ஓராம் | அரக்குமணி |
| கிரீடம் | தளம் | பளிங்கு |
| மகுடம் | ஓலைப்பூ | சாவடி |

### அரும்பொருள்

மிதியடி - செருப்பு. தொட்டு - காலில் அணிந்து. புடை - பக்கம். கிரி - குன்று. எழில் - அழகு, அலங்காரம். கோயில் - அரண்மனை.

### கேள்விகள்

1. அல்லி அரசி அணிந்திருந்த நகைகள் எவை ?
2. கொலு மண்டபப் படித்தளங்கள் எத்தனை ?
3. அவை எப்படி இருந்தன ?
4. அல்லிராணி கொலுமண்டபம் எத்தனை கால்கள் உடையது ?
5. மூன்றும் படித்தளம் என்ன ?

### பயிற்சி

1. முத்து, மிதியடி, தாதி, அழகான, ஆயிரக்கால் மண்டபம், கோயில், இரண்டாம் பொன், சூழ்ந்து, நடந்து—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. சரியான வார்த்தையைக் கோடிட்ட இடத்தில் பொருத்திக் கூறு.

1. மயில் இறகு — இருக்கும் (கனமாக)
2. ஈயக்குண்டு — இருக்கும் (இலேசாக)
3. மடு — இருக்கும் (மேடாக)
4. குன்று — இருக்கும் (பள்ளமாக)
5. வெள்ளி — இருக்கும் (மஞ்சளாக)
6. பொன் — இருக்கும் (வெள்ளையாக)

3. தகுந்த நிறுத்தக் குறிகளை இடு :—

மெய்ப்பேட்டில் வேதியர் ஒருவர் இருந்தார் | அவர் சிவ பக்தர் | காளத்தியப்பரும் சிவ பக்தர் | ஆதலின்— அவர் காளத்தி அப்பருடன் நட்புக் கொண்டிருந்தார் | காளத்தியப்பர் கவலை உடையவராயிருந்தார் | அவர் ஏன் கவலை கொண்டார் | வேதியருக்

குத்தான் இதன் காரணம் தெரியும் | அவர் | காளத்தியப்பரே | கவலேப்படாதீர் | என்று கூறினர் |

4. மேலே உள்ள வாக்கியங்களுக்கு எ. பெ. செ. கூறு.

5. இவ்வாக்கியங்களிலுள்ள பெயர்ச்சொற்களே எழுதி, அவை இன்னின்ன பெயர்சொற்கள் என எழுது.

## இலக்கணம்

### திணை

திணை - குலம்

திணை இருவகைப்படும். 1. உயர்திணை. 2. அஃறிணை.

(1) மனிதரையும் தேவரையும் குறிப்பவை உயர்திணை.

(2) மனிதர், தேவர் தவிர மற்றவைகளேக் குறிப்பவை அஃறிணை.

உ - ம். (1) முருகன், மங்கை, நின்ருள்—உயர்திணை.
(2) மாடு, கொக்கு, ஓடின —அஃறிணை.



# 13. மேட்டூர் அணை

1. நம் நாட்டில் வயல்கள் நன்றாய் விளைய நீர்ப்பாசன வசதி வேண்டும். சில இடங்களில் ஆறுகளிலிருந்தும் ஏரிகளிலிருந்தும் கால்வாய்கள் மூலம் வயல்களுக்கு நீர் கிடைக்கிறது. இந்த வசதி நம் நாட்டின் தேவைக்குப் போதியதாய் இல்லை. எனவே, சில இடங்களில் ஆற்று நீரைத் தேக்கிவைத்து, இன்னும் மிகுதியாய் நீர்பாய வசதி செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறுள்ள நீர்த்தேக்கங்களுள் ஒன்று **மேட்டூர் அணை.** இது உலகத்தின் சிறந்த அணைகளுள் ஒன்றாகும். இந்த அணை காவிரி ஆற்றின்மீது கட்டப்பட்டிருக்கிறது.

2. மேட்டூர் அணை கட்டப்பட்டுள்ள காவிரி ஆறு நம் நாட்டின் பழைய ஆறு. இந்த ஆற்றினாலேயே சோழநாடு ‘வளநாடு’ என்னும் பெயர் பெற்றது. இது மேற்குமலைத் தொடரைச் சேர்ந்த குடகுமலையில் தோன்றி, மைசூர் நாட்டில் புகுந்து, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களின் வழியாகத் தஞ்சாவூரில் நுழைந்து காவிரிப் பூம்பட்டினத்தில் கடலுடன் கலக்கிறது.

3. ஐயாயிரம் அடி உயரத்தில் தோன்றி, பவானி, அமராவதி, நொய்யல் முதலிய சிற்ருறுகள் வந்து கலக்கப் பெற்று சுமார் 500 கல் நீளம் ஓடிவரும் காவிரி ஆற்றின் நீர் பயனற்றுக் கடலில்போய் விழுந்தது. அதனை விரும்பாத மக்கள் முன்னரே அதில் பல அணைகளைக் கட்டினுர்கள். இவற்றுள் பெரியது மைசூரிலுள்ள கண்ணம்பாடி அணை. அடுத்தது மேட்டூர் அணை. இவை தவிர, பெரிய அணைக் கட்டு, மேல்அணைக்கட்டு, கல்லணைக்கட்டு முதலிய சிறு அணைகளும் உண்டு.

4. 1928-ஆம் ஆண்டு, சேலம் நகருக்கு அருகிலுள்ள மேட்டூர் கிராமத்தில் இந்த அணை கட்டும் வேலை துவங்கியது; ஆறு கோடியே எண்பது லட்சம் ரூபாய் செலவில் ஆறு ஆண்டுக் காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது. காவிரியாற்றின் குறுக்கே ஒரு கல் நீளத்திற்கு இந்த அணை கட்டப்பட்டிருக் கிறது. இந்த அணை ஆற்று மணல் மட்டத்திலிருந்து 175 அடி உயரமிருக்கிறது. இருபதரை அடி கனமுள்ள இந்த அணைச் சுவர் நீருக்குக்கீழ் 39 அடி இருக்கிறது. இவ்வளவு உயர முள்ள தடித்த அணைச்சுவர் காவிரியின் வெள்ளத்தைத் தடுப்பதால், அதன் நீர் ஏறக்குறைய அறுபது சதுரமைல் பரவிக் கடல்போலக் காட்சியளிக்கிறது. அந்நீர்த் தேக்கத் தில் 155 அடி ஆழம் நீர் நிற்கிறது.

5. இவ்வண்ணம் தேக்கப்பட்ட நீரைப் பல கால்வாய் களாக ஓடவிடுகின்றனர். அதனுல் பல்லாயிரக் கணக்கான ஏகர் நிலங்கள் நல்ல விளைநிலங்களாக மாற்றப்பட்டன. இத்தேக்கத்தின் பயனுய்த் தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் மூன்று லட்சம் ஏகர் புதிய நிலங்கள் விளைநிலங்களாக ஆக்கப்பட்டு இருக்கின்றன. இவ்வாறு இன்னும் பல ஏகர் தரிசு நிலங்கள் இதனுல் விளைநிலம் ஆகலாம்.

6. மேட்டூர் அணையின் இடப்புறத்தில், மின்சார உற்பத்தி இயந்திரங்கள் வைத்து, தேக்கத்து நீரை விரைவாக மதகுகள் மூலம் பாயச்செய்து, அவ்வேகத்தினின்று மின்சாரம் எடுக்கின்றார்கள். இவ்வாறு மேட்டூர் அணை பல வகையில் நமக்குப் பயன்படுகிறது.

| | | |
|---|---|---|
| நீரப்பாசனம் | குடகுமலை | கண்ணம்பாடி |
| நீர்த்தேக்கம் | மைசூர் | தரிசு நிலம் |
| அணை | காவிரிப்பூம்பட்டினம் | மேட்டூர் |
| வளநாடு | நொய்யல் | மதகுகள் |

## அரும்பொருள்

நீர்ப்பாசன வசதி - வயல்களுக்கு நீர் பாய்வதற்காகச் செய்யும் பலவகை வசதிகள். தேக்கி - திரட்டி. வளநாடு - செழுமையான நாடு. தரிசு நிலம் - விளைச்சலுக்குப் பயன்படாத நிலம். விரைவு - வேகம்.

## கேள்விகள்

1. நீர்ப்பாசன வசதி என்பது யாது?
2. நம் நாட்டில் உள்ள மிகச் சிறந்த அணை எது?
3. காவிரி ஆறு எங்குத் தோன்றி எங்குக் கடலில் கலக்கிறது?
4. அதில் கட்டப்பட்டுள்ள அணைகள் எவை?
5. மேட்டூர் அணை எங்குக் கட்டப்பட்டுள்ளது?
6. அந்த அணை எவ்வாறு கட்டப்பட்டுள்ளது?
7. அதனால் நமக்குக் கிடைக்கும் பயன்கள் யாவை?

## பயிற்சி

I. 1. வயல்கள், நீர்ப்பாசனம், ஆறு, உணவுப் பொருள், வளநாடு, அணைக்கட்டு, காவிரி ஆறு, ஏறக்குறைய—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. தண்ணீர் × வெந்நீர். பழைய × புதிய. நன்மை × தீமை—இவை எதிர்ச் சொற்கள். இவற்றைப் போன்று நான்கு எதிர்ச் சொற்களைக் கூறு.

136168

3. இவற்றுள் பொருத்தமானவற்றைக் கோடிட்ட இடங்களில் அமை :—

| நாடு | காடு | வீடு | ஓடு | போடு | ஏடு | மாடு |
|---|---|---|---|---|---|---|

1. நாம் குடியிருப்பது——.
2. விலங்குகள் வாழ்வது——.
3. மக்கள் கூடிவாழ்வது——.
4. பிச்சைக்காரன் கையிலிருப்பது——.
5. பாலைக் காய்ச்சினால் கட்டுவது——.
6. வண்டி யிழுப்பது——.
7. பாலில் சிறிது சர்க்கரை——.

II. 1. மேல் வாக்கியங்களிலுள்ள பெயர்ச்சொற்களை எடுத்து அவை இன்னின்ன பெயர்கள் என்று கூறு.

2. அரச அவையில் அமர்க.
கண்ணன் அமைச்சன் ஆதல் ஏற்றது.
அரசன் கண்ணனைக் காண ஆசை கொண்டான்.
கண்ணன் தாய் மங்கை ஆவாள்.
வீரர்கள் கண்ணனை வாழ்த்தினர்கள்.

இவற்றிலுள்ள உயர்திணை, அஃறிணைப் பெயர்களைக் கட்டத்தில் பொருத்தி எழுது.

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| | |

## 14. சுகாதாரம்

1. ‘சுத்தம் சோறு போடும்’ என்பது முன்னோர் பொன்மொழி. நாம் ஒவ்வொருவரும் சுத்தமாய் இருக்க வேண்டும். நாம் வசிக்கும் இடங்களையும் சுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டும். உடல், உடை, உணவு, இருப்பிடம் ஆகியவற்றை எப்பொழுதும் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும்.

2. சுத்தமான காற்றும் சூரிய ஒளியும் நோய்களை ஒழித்து நம்மைச் சுகமாய் வாழவைக்கும். ஆதலால் நாம் நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ள இடங்களில் வாழ வேண்டும். நாம் நல்ல காற்றை மூச்சிழுத்து விடவேண்டும். நம் உடல்மீது சூரிய ஒளி படவேண்டும். இப்படி இருந்தால் நோய் நம்மை அணுகாது.

3. நாம் வீட்டைச் சுற்றிலும் குப்பை கூளங்களைப் போடக்கூடாது; வீட்டில் குப்பையும் அழுக்கும் சேர விடக் கூடாது; தண்ணீரைக் குட்டை குட்டையாக நிற்க விடக் கூடாது. சாக்கடைகள் எப்போதும் சுத்தமாய் இருக்க வேண்டும். கரப்பான்பூச்சி, மூட்டைப்பூச்சி, கொசு, எலி முதலியவற்றை வீட்டில் சேர விடக்கூடாது.

4. நாம் எப்போதும் சூடாயுள்ள உணவையே சாப்பிட வேண்டும். உணவு நன்றாய்ச் சமைக்கப்பட்டதாய் இருக்க வேண்டும். சரியாய்ப் பழுக்காததும் அழுகியதுமான பழங் களைத் தின்னக்கூடாது.

5. நாம் சுத்தமான நீரையே குடிக்கவேண்டும்; நீரைக் காய்ச்சி வடிகட்டி ஆறவைத்துக் குடிப்பதே சிறந்ததாகும்; நாள் தவறாமல் நல்ல நீரில் குளிக்கவேண்டும்; நல்ல நீரில் நாள்தோறும் துணிகளைத் துவைத்துக் காயவைத்து நன்றாய்க் காய்ந்த பிறகே கட்டவேண்டும்.

6. மாணவர்கள் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் உடற்பயிற்சி செய்யவேண்டும்; கெட்ட காற்று வீசும் இடங்களிலோ, இருட்டாக உள்ள இடங்களிலோ சிறிது நேரமும் உட்காரக்கூடாது; இருட்டு அறையில் உட்கார்ந்து கொண்டிருப்பதோ, தூங்குவதோ கூடாது; மங்கிய ஒளியில் படித்தல் கூடாது; மிகுந்த வெளிச்சம் கண்களில் நேரடியாகப் படுமாறும் படிக்கக்கூடாது.

7. இவ்வண்ணம் சுகாதார விதிகளை விடாமல் கடைப்பிடித்து வந்தால், எந்த விதமான நோயும் அணுகாமல் சுகமாக வாழ முடியும். எனவே, ஒவ்வொருவரும் சுகாதாரத்துடன் வாழ, நல்ல காற்று, நல்ல ஒளி, சுத்தமான தண்ணீர், சுத்தமான உடை, உணவு, இருப்பிடம் முதலியவைகளுடன் இருக்க முயலவேண்டும்.

| | | |
|---|---|---|
| பொன்மொழி | வெளிச்சம் | இருப்பிடம் |
| காற்ளேட்டம் | அணுகாது | கடைப்பிடித்து |

## அரும்பொருள்

ஒளி - வெளிச்சம். காற்ளேட்டம் - காற்று + ஓட்டம் - காற்று நன்ருக வீசுதல். அணுகாது - நெருங்காது. மங்கிய - குறைந்த. கடைப்பிடித்து பின்பற்றி.

## கேள்விகள்

1. நாம் எவற்றினைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்?
2. பெரியவர்களின் பொன்மொழி யாது?
3. சுகமாக வாழ எது தேவை?
4. நாம் நோய் அணுகாதிருக்க என்ன செய்யவேண்டும்?
5. நாம் எவற்றைச் செய்யக்கூடாது? எவற்றைச் செய்ய வேண்டும்.
6. நீ இப்பாடத்திலிருந்து கற்றுக்கொள்வது யாது?

## பயிற்சி

1. சுத்தம், உடல், உணவு, காற்று, சூரியஒளி, காற்றேட்டம், அணுகாது, குப்பை கூளம், அழுகிய பழங்கள், மங்கிய ஒளி, இருட்டு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

2. குட்டை குட்டை, நல்ல நல்ல—இவை அடுக்குத் தொடர்கள். இவைபோன்று இன்னும் நான்கு அடுக்குத்தொடர்களைக் கூறு.

3. வேண்டும் × வேண்டா. சுத்தம் × அசுத்தம். ஒளி × இருட்டு. சுகம் × துக்கம். அணுகாது × அணுகும். சூடு × குளிர்ச்சி—இவை எதிர்ச் சொற்கள். இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

## இலக்கணம்

### பால்

பால்—பிரிவு, பால் என்பது ஐந்து வகைப்படும். அவை, ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின் பால் என்பன.

| | | |
|---|---|---|
| கந்தன் | — ஆண்பால் | உயர்திணை |
| சீதை | — பெண்பால் | |
| வீரர் | — பலர்பால் | |
| மாடு | — ஒன்றன்பால் | அஃறிணை |
| மாடுகள் | — பலவின்பால் | |

ஆண்பால், பெண்பால், பலர்பால் இம்மூன்றும்உயர்திணைக்கே உரியவை ஆகும். பலர்பால் ஒன்றுக்கு மேற்பட்டவர்களைக் குறிக்கும்.

ஒன்றன்பால் பலவின்பால் இவ்விரண்டும் அஃறிணைக்கே உரியவை ஆகும்.

ஒன்றன்பால் அஃறிணைப் பொருள் ஒன்றை மட்டுமேகுறிக்கும்.

பலவின்பால் ஒன்றுக்கு மேற்பட்ட அஃறிணைப் பொருள்களைக் குறிக்கும்.

# 15. இன்பச் செலவு*

1. நான் நான்காம் வகுப்பு மாணவன். என் பெயர் கண்ணன். நான் என் வகுப்பு ஆசிரியருடனும் மாணவருடனும் மஹாபலிபுரம் சென்றேன். நாங்கள் சென்னையிலிருந்து பஸ்ஸில் ஏறிச் சென்றோம்; வழியில் செங்கற்பட்டு, திருக்கழுக்குன்றம் இவற்றைப் பார்த்துக் கடைசியில் மஹாபலிபுரம் அடைந்தோம்.



மஹாபலிபுரம் - கற்கோவில்கள்
(Copyright—Archaeological Survey of India)

2. நாங்கள் அங்கு பார்த்தவை பல. அந்த அற்புதங்களைப்பற்றி எங்கள் ஆசிரியர் விளக்கினர். நாங்கள் முதலில் பஞ்ச பாண்டவர் இரதங்களைப் பார்த்தோம். அவை இரதங்கள் அல்ல; கோவில்களே ஆகும். ஒவ்வொரு கோவிலும் ஒரு பெரும் பாறையைக் குடைந்து செய்யப்பட்டு இருக்கிறது. கோவில் விமானம் மிகவும் அழகாய் அமைந்திருக்கிறது.

*செலவு - யாத்திரை

3. சிங்கம், யானை என்பன மிகவும் அழகாய்ச் செதுக்கப்பட்டு இருக்கின்றன. சில பாறைகளைப் பக்கங்களில் குடைந்து கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோவிலிலும் பலவகை உருவங்கள் அழகாய்ச் செதுக்கப்பட்டுள்ளன. அவ்வுருவங்களுள் சில அக்கோவில்களைச் செதுக்கச் செய்த பல்லவ அரசர் உருவங்கள் ஆகும்.

4. சில இடங்களில் பாறைகளில் அமைந்த மண்டபங்கள் இருக்கின்றன. அவற்றின் சுவர்களில் மிகவும் அழகான சிற்பங்கள் காணப்படுகின்றன. பகீரதன் தவத்தைக் குறிக்கும் சிற்பம் பார்க்கத் தக்கது. கங்கை ஆற்றங் கரையில் பலர் நீராடுதல்-முனிவர்கள் இருந்து தவம் செய்தல்-அவர்களைப் பார்த்துப் பூனை ஒன்று தவம் செய்தல்—அதைக் கண்டு எலிகள் அதனை வணங்கி நிற்றல்—ஆகாய கங்கை வானத்திலிருந்து இறங்கி வருதல் போன்ற பல காட்சிகள் சுவர்களில் செதுக்கப்பட்டுள்ளன.

5. மற்றொரு மண்டபத்தில் எருமைத் தலை அசுரனுடன் காளியம்மை போர் செய்வதுபோலச் செதுக்கப்பட்டுள்ள சிற்பம் பேரழகுடன் காணப்படுகிறது. கண்ணன் கோவர்த்தன மலையை எடுத்து மழையைத் தடுத்துப் பசுக்களையும் கோபாலர்களையும் காப்பதுபோன்ற காட்சி மற்றொரு பாறையில் செதுக்கப்பட்டு இருக்கிறது.

6. மஹாபலிபுரத்தில் ஆதிவராகர் கோவில் ஒன்று இருக்கிறது. அதனில் இரண்டு பெரிய சிற்பங்கள் சுவர்களில் எதிர் எதிராய்க் காண்கின்றன. ஒவ்வொன்றிலும் அரசன், அவன் மனைவியர் இருவர் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவை **சிம்ம விஷ்ணு**, அவன் மகனை **மகேந்திர வர்மன்** என்ற பல்லவ அரசர்களையும் அவர்களுடைய மனைவிமார்களையும் குறிப்பவை.

7. மஹாபலிபுரம் கடற்கரையில் இருப்பது. கடற்கரையில் சிறிய கற்கோவில்கள் இரண்டு இருக்கின்றன. அவை பார்க்க அழகானவை. பல்லவர்கள் காலத்தில் மஹாபலிபுரம் சிறந்த துறைமுகப் பட்டினமாக இருந்தது; பெரிய பட்டினமாகவும் இருந்தது. இன்று அது ஒரு சிற்றூராகக் காணப்படுகிறது. எனினும் அவ்வூர் சரித்திரப் புகழ் பெற்றது. நாள்தோறும் பலர் வந்து அவ்வூரைப் பார்த்துப் போகின்றனர்.

| | | |
|---|---|---|
| செங்கற்பட்டு | குடைந்து | கோபாலர்கள் |
| திருக்கழுக்குன்றம் | பல்லவ அரசர் | செதுக்கப்பட்டு |
| மஹாபலிபுரம் | பகீரதன் | ஆதிவராகர் |
| இன்பச் செலவு | அசுரன் | சிற்பங்கள் |
| பஞ்ச பாண்டவர் | காளியம்மை | சிம்மவிஷ்ணு |
| இரதங்கள் | கோவர்த்தன மலை | மகேந்திரவர்மன் |

## அரும்பொருள்

குடைந்து - துளைத்து. பல்லவ அரசர் - காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவர்கள். கோபாலர் - மாடு மேய்ப்பவர்கள்.

## கேள்விகள்

1. மஹாபலிபுரம் போகும் வழியில் என்னென்ன ஊர்கள் இருக்கின்றன?
2. பஞ்சபாண்டவர் இரதங்கள் என்பவை யாவை?
3. பாறை மண்டபச் சுவர்களில் காணப்படும் சிற்பங்கள் யாவை?
4. மற்றொரு மண்டபத்தில் உள்ள காட்சி யாது?
5. சிம்மவிஷ்ணு, மகேந்திரவர்மன் உருவங்கள் எங்கிருக்கின்றன?
6. மஹாபலிபுரம் எங்கு இருக்கிறது?
7. அதன் பழைய வரலாறு யாது?

## பயிற்சி

1. பஸ், அற்புதம், பஞ்சபாண்டவர், பாறை, சிற்பம், இரதம், கோவில், மண்டபம், கடற்கரை, குடைந்து, சிற்றூர்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப் படி.

2. ஏறி × இறங்கி. கடைசியில் × முதலில். பார்த்தவை × பாராதவை—இவை எதிர்ச்சொற்கள். இவ்வாறு இப்பாடத்திலிருந்து ஐந்து எதிர்ச்சொற்களைக் கூறு.

## இலக்கணம்

### எண்

1. எண்—பொருள்களின் எண்ணிக்கை.

எண் இரண்டு வகைப்படும். (1) ஒருமை. (2) பன்மை. ஒன்றாக இருந்தால் ஒருமை எண். ஒன்றுக்கு மேற்பட்டு இருக்குமாயின் பன்மை எண் எனப்படும்.

மலை, போனான், புறா, பறந்தது—ஒருமை எண்.
மலைகள், போனார்கள், புறாக்கள், பறந்தன—பன்மை எண்.

2. நூறு மலர்களை வைத்து ஒரு மாலை கட்டு
புலிகள் காட்டில் வாழ்கின்றன.
கன்றுக் குட்டிகள் துள்ளி விளையாடின.
ஆறு வளைந்து வளைந்து ஓடிக் கடலில் விழுந்தது.

இவ்வாக்கியங்களிலுள்ள ஒருமை, பன்மைகளைக் கட்டத்தில் பொருத்திக் காட்டு :—

| ஒருமை | பன்மை |
|---|---|
| | |

## 16. சங்க கால நிகழ்ச்சி

1. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் மதுரை பாண்டியர் தலைநகரமாய் இருந்தது. மதுரையில் நங்கை என்ற பெயர் கொண்டவள் ஒருத்தி இருந்தாள். அவள் பாண்டி நாட்டு வீரன் ஒருவன் மகள். அவள் ஒரு வீரனை மணந்துகொண்டாள். அவளுடன் பிறந்த ஆடவர் இருவர். அவர்களும் பாண்டியன் படையில் வீரர்களாய் இருந்தனர்.

2. ஒரு முறை சேர மன்னன் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தான். அப்போது பாண்டியனுக்கும் சேரனுக்கும் கடும்போர் நடந்தது. அப்போரில் நங்கையின் தந்தை போர் வீரனாய் இருந்து போரிட்டான். பாண்டியன் போரில் வென்றான். ஆயினும் நங்கையின் தந்தை போரில் மார்பில் புண்பட்டு மாண்டான். பாண்டியன் அவ்வீரனைப் பாராட்டி அவன் வீட்டாருக்குப் பரிசுகள் வழங்கினான். நங்கை தன் தகப்பன் நினைவாய்க் கல் நட்டாள்; அக்கல்லில் அவன் உருவத்தைச் செதுக்குவித்தாள்; அவன் பெயர் முதலியன எழுதுவித்தாள்.

3. மற்றொரு சமயம் சோழன் பாண்டியன்மீது படையெடுத்தான். அப்பொழுது நடந்த போரில் நங்கையின் கணவன் கலந்துகொண்டான். அவன் சிறந்த வாள் வீரன்; பகைவர் பலரைத் தன் வாளால் கொன்றான். இம்முறையும் பாண்டியனே வெற்றி பெற்றான். ஆனால் பாவம்! நங்கையின் கணவன், பகைவன் விட்ட வேல் பாய்ந்து களத்தில் இறந்தான். "என் கணவன் தாய் நாட்டுக்காக உயிர் தந்த வீரன்!" என்று நங்கை கூறி மகிழ்ந்தாள்.

4. பின்னொரு முறை சேரன் பாண்டியன்மீது படையெடுத்தான். அப்பொழுது நடந்த பெரும் போரில், நங்கையின் தமையன்மார் இருவரும் கலந்துகொண்டனர். அவர்

கள் சிறந்த வில் வீரர்கள்; நன்ருய்ப் போரிட்டுப் பகை வீரரைக்கொன்று குவித்தனர். ஆயின், பாவம்! அவர்கள் இருவரும் போர்க்களத்தில் இறந்தனர். "ஆண் சிங்கங்கள் போன்ற என் தமையன்மார் நாட்டுக்காகப் போரிட்டு இறந்தனர்," என்று நங்கை கூறி மகிழ்ச்சி அடைந்தாள்.

5. சில ஆண்டுகளுக்குப் பிறகு சோழன் பாண்டிய நாட்டின்மீது மறுமுறையும் படையெடுத்தான். அப்பொழுது, "வீட்டுக்கு ஒரு வீரன் வந்து போரில் கலக்க வேண்டும்," என்று பாண்டியன் ஆணை பிறப்பித்தான்.



நங்கையின் வீட்டில் அவளுடைய ஒரே மகன் இருந்தான். அவனுக்கு வயது பதினறு. அவள் அவனை அழைத்து, போர் உடையை உடுத்தினள்; வாளைக் கையில் கொடுத்தாள்; அவனைத் தழுவி, "மகனே, உன் பாட்டனர் போரில் உயிர் துறந்தார்; உன் தகப்பனர் களத்தில் உயிர் விட்டார்; உன் மாமன்மார் போர் செய்து மடிந்தனர். நமது குடும்பம் வீரர் குடும்பம். நீ வீரர் பரம்பரையில் வந்தவன். ஆதலால் நாட்டுக்காகப் போர் செய்யப் புறப்படு. போரில் வெற்றி

பெற்ருல் திரும்பி வா; இறக்க நேரின் மார்பில் புண்பட்டு இற. போருக்குப் பயந்து ஓடி வராதே," என்று கூறி அனுப்பினுள்.

6. அம்மைந்தன் போர்க்களம் சென்ருன்; பகைவர் நடுவிற் புகுந்து நன்ருய்ப் போரிட்டான்; பகைவர் வேல்களால் தாக்குண்டு இறந்தான். அவன் இறந்ததைக் கேட்ட நங்கை போர்க்களம் சென்ருள்; அவன் உடம்பு முழுவதும் வேல்கள் தைக்கப்பெற்று இருந்ததைக் கண்டாள்; "என் மகன் வீரன்; தாய் நாட்டுக்காக உயிர் விட்டான்," என்று கூறி ஆனந்தக் கண்ணீர் விட்டாள்.

7. இத்தகைய வீரப்பெண்மணிகள் பலர் வரலாறுகளைக் கூறுவன சங்க நூல்கள் என்பவை. நீங்கள் பெரியவர்களான பின் அவற்றை நன்ருய்ப் படியுங்கள்.

| | | |
|---|---|---|
| இரண்டாயிரம் | பரிசுகள் | வில்வீரன் |
| மதுரை | உருவத்தை | பரம்பரை |
| நங்கை | எழுதுவித்தாள் | போர்க்களம் |
| ஆடவர் | வேல் | தாக்குண்டு |

## அரும்பொருள்

உடன்பிறந்த ஆடவர் - சகோதரர். ஆணை பிறப்பித்தான்- கட்டளையிட்டான். பரம்பரை - தலைமுறை. தாக்குண்டு - அடிபட்டு.

## கேள்விகள்

1. நங்கை என்பவள் யார்?
2. முதற்போரில் இறந்தது யார்?
3. இறந்தவருக்காக நங்கை என்ன செய்தாள்?
4. இரண்டாவது போரில் இறந்தது யார்?
5. தமையன்மார் இறந்ததுபற்றி நங்கை என்ன கருதினுள்?
6. மகனைப் போருக்கு அனுப்பியபொழுது நங்கை என்ன கூறினுள்?
7. இக்கதையிலிருந்து நீங்கள் அறிவது யாது?

### பயிற்சி

1. ஒருத்தி, அவள், ஆடவர், தந்தை, மகிழ்ந்தாள், வெற்றி, ஆனந்தக் கண்ணீர்—எதிர்ச்சொற்கள் கூறு.

2. இக்கதையைப் பாண்டியன் கூறுவதுபோலக் கூறு.

3. மணம், படை, ஆடு, பிழை, வளை, தையல், ஆண்டு—இரு பொருள் கூறு.

4. பொருத்தமான சொற்களை அமைத்துப் பழமொழியாக்கு:

1. பணம் இல்லாதவன் —.
2. அடாது — படாது —.
3. — மிஞ்சினால் — நஞ்சாகும்.
4. இளங் — பயம்—.

### இலக்கணம்

### இடம்

கண்ணன், "கந்தா, முருகன் கெட்டிக்காரன்" என்றான்.—இந்த வாக்கியத்தில் பேசினவன் கண்ணன்? அதைக் கேட்டவன் கந்தன்; பேசப்பட்டவன் முருகன். எனவே இவ்வாறு வரும் நேர்கூற்று வாக்கியங்களில் (1) பேசுபவன், (2) பேச்சை முன் னின்று கேட்பவன், (3) பேசப்படுபவன் என மூவர் குறிக்கப்படு வர். இம்மூவர் இடங்களும் முறையே (1) தன்மை இடம், (2) முன்னிலை இடம், (3) படர்க்கை இடம் எனப் பெயர் பெறும்.

1. தன்மை இடம்—ஒன்றைப் பற்றிப் பேசுபவன் இடம்.
2. முன்னிலை இடம்—அதனை முன் நின்று கேட்பவன் இடம்.
3. படர்க்கை இடம்—பேசப்படுபவன் அல்லது பேசப்படும் பொருள்கள் (எல்லாப் பெயர்ச்சொற்களும்) நிற்கும் இடம்.

நான், நாங்கள்—தன்மை இடம்.

நீ, நீங்கள், நீர்—முன்னிலை இடம்.

அவன், அவள், அவர், அது, அவை, மரம், மாடு, கொக்கு முதலியவை—படர்க்கை இடம்.

# 17. என் வரலாறு

## (தாமிரபருணியின் சுயசரிதை)

1. என் பெயர் தாமிரபருணி. தாமிரம் (செம்பு) என்னும் உலோகத்தின் சத்து என்னிடம் மிகுதியாகக் கலந்திருப்பதால் எனக்கு இப்பெயர் இடப்பட்டது. நான் மேற்கு மலைத்தொடரில் அகஸ்திய மலையில் பிறந்தேன்.



2. நான் மற்ற ஆறுகளைப்போலச் சிறிது காலம் நீரோட்டத்துடன் இருந்து பிறகு வற்றிவிடமாட்டேன். ஆண்டு முழுவதும் நீரோட்டத்துடன் காட்சி அளிப்பேன். திருநெல்வேலி மாவட்டம் முழுவதிலும் விளைவுக்கு ஆதாரமாயிருப்பது நானே. நான் பல கால்வாய்கள்மூலம் அம் மாவட்டம் முழுவதிலும் உலாவுகிறேன்.

3. என் கரையோரத்தில் பாபநாசம், திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி முதலிய சிறந்த ஊர்கள் இருக்கின்றன. என் நீரோட்ட வேகத்தை தடுக்க மக்கள் பன்னிரண்டு அணைகள் கட்டியிருக்கின்றனர்.

4. அம்பாசமுத்திரத்திற்கருகில் நான் மலைமீதிருந்து கீழே பாய்கிறேன். இங்கே எனக்குப் பாபநாசம் நீர்வீழ்ச்சி என்பது பெயர். இங்கு நான் பாயும் வேகத்திலிருந்து மக்கள் மின்சார சக்தி எடுக்கின்றனர்.

5. என்னோடு பல கிளையாறுகள் வந்து சேருகின்றன. அவற்றுள் சிறந்தது சிற்றாறு என்பது. அது தென்காசிக்கு மூன்றரை மைல் தொலைவில் உள்ள திரிகூடமலை என்னும் குற்றால மலையிலிருந்து கீழே பாய்கிறது. குற்றாலமலை இயற்கை அழகும் வளமும் மிகுந்த மலை. அம்மலைமீதிருந்து பல கால்களாகப் பிரிந்து சலசல என்னும் ஒலியுடன் விழும் சிற்றாறு குற்றால நீர்வீழ்ச்சி என்னும் பெயர் பெற்று, மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்துகொண்டது. அந்நீர் வீழ்ச்சியைக் காணவும், அதில் குளித்து முழுகவும் அங்கேயே பல நாட்கள் வரை தங்கவும் மக்கள் நாள்தோறும் அங்கு சென்றபடி இருக்கின்றனர்.

6. இவ்வண்ணம் நான் கல்லும் மலையும் குதித்து, காடு செடி கடந்து வந்தேன்; மக்கள் கட்டும் அணைகளிற் புகுந்து, கண்ணறைகள் மூலம் பாய்ந்து வந்தேன். திட்டுத் திடர்கள் சுற்றி மடைச் சீப்புகளை மோதித்திறந்து வந்தேன். ஏறாத மேடுகள் எல்லாம் ஏறி, ஏரி குளங்களை யெல்லாம் நிரப்பி, ஓடைகள் ஊற்றுக்களில் புகுந்து, இறுதியில் திருநெல்வேலி மாவட்டம் மன்னார் வளைகுடாவில் கடலில் கலந்தேன்.

7. நான், வறண்டு கிடக்கும் வயல்களைப் பசுமை அடையச் செய்கிறேன்? தாகத்தால் தவிக்கும் மக்களுக்குத் தாகந் தீர்க்கிறேன்; நிலத்தின் வெப்பத்தை ஆற்றி குளிரச் செய்கிறேன்; மக்கள் உடற்பிணிகளை என் தாமிரச் சத்தினால் தீர்த்து வைக்கிறேன்; மலர்ச் சோலைகள் நிறையச் செய்து நாடு நகரங்களை அழகு படுத்துகிறேன்; மக்கள் அழகிய

காட்சி எனக் கண்டு மகிழும்படி வளம் மிக்க காட்சிகளை ஏற்படுத்துகிறேன். நான் மக்களின் உயிர்நாடி அல்லவா?

"ஆறில்லா ஊருக்கு அழகுபாழ்."

| | | |
|---|---|---|
| தாமிரபருணி | ஆழ்வார் திருநகரி | குற்றாலம் |
| தாமிரம் | அம்பாசமுத்திரம் | கண்ணறைகள் |
| அகஸ்தியமலை | நீர்வீழ்ச்சி | திட்டுத்திடர் |
| நீரோட்டம் | பாய்கிறேன் | மடைச் சீப்பு |
| பாபநாசம் | கிளையாறுகள் | வளைகுடா |
| திருநெல்வேலி | தென்காசி | அழகிய |
| ஸ்ரீவைகுண்டம் | திரிகூடமலை | மலர்ச்சோலை |

## அரும்பொருள்

வண்ணம் - விதம். கண்ணறை - மதகு. மூலம் - வழி. திட்டுத்திடர் - திட்டுத்திட்டாயுள்ள நிலங்கள், புதர்களடங்கிய வெளியிடங்கள். மடைச்சீப்புகள் - மதகு நீர் தாங்கும் பலகை.

## கேள்விகள்

1. தாமிரபருணி ஆறு எங்குத் தோன்றுகிறது?
2. கோடையில் தாமிரபருணியில் நீர் இருக்குமா?
3. அந்த ஆற்றின் கரையில் உள்ள சிறந்த ஊர்கள் எவை?
4. பாபநாசம் நீர்வீர்ழ்ச்சி எங்குள்ளது?
5. குற்றாலத்தில் நீர்வீழ்ச்சியாக விழுவது எந்த ஆறு?
6. தாமிரபருணி கடலில் கலக்கும்வரை என்னென்ன செய்கிறது?
7. தாமிரபருணியால் மக்கள் அடையும் நலன்கள் யாவை?

## பயிற்சி

1. நீரோட்டம், வற்றி, விளைவு, ஆதாரம், உலாவுகிறேன், மின்சார சக்தி, குதித்து, பாய்ந்து, ஓடை, மலர்ச் சோலை— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. சலசல, மளமள, பளபள—இவை இரட்டைச் சொற்கள். இவை போன்று ஐந்து இரட்டைச் சொற்கள் கூறு.

3. மிகுதியாக × குறைவாக. தொலைவில் × அருகில்—இவை எதிர்ச்சொற்கள்—இவைபோன்று நான்கு எதிர்ச்சொற்களைக் கூறு.

## இலக்கணம்

### வினைமுற்று

1. கலைச்செல்வி படித்தாள், மணிமேகலை பாடி விளையாடினாள், அல்லி ஓடி விழுந்தாள்—இவற்றுள் படித்தாள், பாடி விளையாடினாள், ஓடி விழுந்தாள் என்பவை வினைச்சொற்கள். படித்தாள், விளையாடினாள், விழுந்தாள் என்பவை கருத்து முடிந்து நிற்கின்றன. பாடி, ஓடி என்பவை கருத்து முற்றுப்பெறாத எச்சச் சொற்கள். எனவே படித்தாள், விளையாடினாள், விழுந்தாள் என்பவை வினைமுற்று எனப்படும்.

2. தூங்கு, விழு, சாப்பிடு, விளையாடு, ஓடு, ஆடு—இவற்றைப் பெயர்ச்சொற்கள் ஆக்கு.

3. இப்பாடத்திலிருந்து இடப்பெயர், காலப்பெயர், பொருட்பெயர்கள் இரண்டிரண்டு கூறு.

## 18. செந்தமிழ் நாடு

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.

2. காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி—என
மேவிய யாறு பலவோடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு.

3. முத்தமிழ் மாமுனி நீள்வரைய—நின்று
மொய்ம்புறக் காக்கும் தமிழ்நாடு—செல்வம்
எத்தனை யுண்டு புவிமீதே—அவை
யாவும் படைத்த தமிழ்நாடு.

4. கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்விதமாயின சாத்திரத் தின்மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு.

5. வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகாரமென் றோர்மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு.

—பாரதியார்

| | | |
|---|---|---|
| வையை | மொய்ம்பு | வள்ளுவன் |
| மேவிய | புவி | அள்ளும் |
| திருமேனி | சாத்திரம் | சிலப்பதிகாரம் |
| நீள்வரை | பாரெங்கும் | மணிஆரம் |

### அருஞ்சொற்பொருள்

முத்தமிழ் மாமுனி - அகத்தியன். நீள்வரை - நீண்டமலை (பொதிய மலை). மொய்ம்பு - வலிமை. புவி - பூமி. பார் - உலகம்.

வள்ளுவர் - திருவள்ளுவர். அள்ளும் - கவரும். சிலப்பதிகாரம் - கோவலன் கண்ணகி வரலாறு கூறும் நூல். மணிஆரம் - இரத்தினமாலை.

### கேள்விகள்

1. தமிழ் நாட்டில் ஓடும் ஆறுகள் எவை ?
2. முத்தமிழ் மாமுனி யார் ? நீள்வரை எது ?
3. தமிழ்நாடு எதிற் சிறந்தது ?
4. தமிழ்நாடு யாரை உலகினுக்குத் தந்தது ?
5. தமிழ்நாடு படைத்த மணி ஆரம் எது ?

### பயிற்சி

1. செந்தமிழ், தேன், சக்தி, காவிரி, ஆறு, செல்வம், கம்பன், கல்வி, மணி ஆரம், வீசும்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. நீ இப்பாடத்திலிருந்து அறிவதைப் பத்து வரிகளில் எழுது.

### இலக்கணம்

## பெயர் எச்சம்

| | |
|---|---|
| போன பையன் | வந்த மனிதன் |
| பாடிய பெண் | ஓடுகின்ற மாடு |
| சிரிக்கின்ற சீதை | அழுகின்ற வரதன் |

1. தொழில் முற்றுப் பெருதது எச்சம். எச்சம் என்ருல் முடியாதது என்பதாகும். எச்சமாக நிற்கும் சொல் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிந்தால் பெயர் எச்சம் எனப்படும்.

போன பையன் என்பதில் போன என்பது தொழில் முடியாமல் எச்சமாய் நிற்கும் சொல். பையன் என்பது பெயர்ச் சொல். 'போன' என்னும் எச்சச் சொல் 'பையன்' என்னும் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிவதால், பெயர் எச்சம் எனப்படும்.

2. இருந்தது, இருந்தாள், இருந்த மன்னன், வென்ருன், வென்ற பாண்டியன், செதுக்கினுன், எழுதினுள், அனுப்பிய நங்கை, ஆடினுன், பாடினுன், பாடிய வீரன்—இவற்றிலுள்ள வினைமுற்று, பெயர் எச்சம் முதலியவற்றைக் கூறு.

# 19. யானையும் தையற்காரனும்



'பயிற்சி

I. 1. படம் பார்த்துக் கதை கூறு.
   2. இக்கதையை 15 வரிகளில் எழுது.
   3. இதனைத் தையற்காரன் சொல்லுவது போலச் சொல்.
   4. இதனை யானையே சொல்லுவது போலச் செய்.
   5. நீ இக்கதையால் அறியும் நீதி யாது ?

II. 1. பிரித்து எழுது :—கலந்திருப்பதால், நீரோட்டம், மூன்றறை, கண்ணறை, உடற்பிணி, மலையிலிருந்து, மலைத்தொடரிலுள்ள.

2. சேர்த்து எழுது :—ஆதாரமாய் + இருப்பது, கரை + ஓரம், கட்டி + இருக்கின்றனர், கிளை + ஆறு, ஆறு + இல்லா.

## இலக்கணம்

## வினை எச்சம்

III. 1. வசந்தா வந்து பாடினாள். அவள் சிரித்து விளையாடினாள். நாங்கள் கேட்டு மகிழ்ந்தோம். நாங்கள் கண்டு களித்தோம்.

மேலே உள்ள தொடர்களில் தடித்த எழுத்துக்களில் இருப்பவை வினைச் சொற்கள். தொழில் முற்றுப் பெறுதது எச்சம் என முன்னரே படித்தோம். இந்த எச்சம் பெயர்ச் சொல்லைக்கொண்டு முடிந்தால் பெயர் எச்சம் எனவும் படித்தோம். ஆனால், இங்கு இந்த எச்சம் வினைச்சொல்லைக் கொண்டு முடிவதால் வினை எச்சம் எனப்படும்.

இவற்றைப் படி :—

1. புலி பாய்ந்தது.
2. யானைகள் ஓடின.
3. தாய் சிரித்தாள்.

இவ்வாக்கியங்களைக் கொண்டு கீழுள்ள கட்டத்தை நிரப்பு :—

| வாக்கியங்கள் | எழுவாய் | பயனிலை | திணை | பால் | எண் | இடம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |

# 20. கடிதங்கள்

15, பவணந்தி தெரு,<br>இராயபுரம், சென்னை.

I

15–10–'49.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம்.

ஐயா,

நான், செங்கற்பட்டிலுள்ள என் தமக்கையார் வீட்டுக்குச் செல்ல வேண்டி யிருக்கிறது. ஆதலால் எனக்கு இன்றும் நாளையும் விடுமுறை அளிக்கும்படி வேண்டுகிறேன்.

இங்ஙனம்,<br>தங்கள் பணிவுள்ள மாணவன்,<br>க. சுந்தரேசன்

நான்காம் வகுப்பு ஆசிரியர் அவர்கள்,
நகராண்மைக் கழகப் பள்ளி,
இராயபுரம், சென்னை.

II

20, இளங்கோ தெரு,<br>காட்பாடி,<br>20–10–'49.

வர்தா பதிப்புக் கழகம்
மானேஜர் அவர்களுக்கு,

அன்புள்ள ஐயா,

கீழ்வரும் ஒவ்வொரு நூலிலும் 50 படிகள் கட்டி ரயில்வே பார்சலில் அனுப்பும்படி வேண்டுகிறேன்.

1. தேசீய தமிழ் வாசகம் —முதற் புத்தகம்
2. — ஷை — —இரண்டாம் புத்தகம்

இங்ஙனம்,<br>தங்கள் அன்புள்ள,<br>க. சரவண வேலன்

வர்தா பதிப்புக் கழகம்,
திருவல்லிக்கேணி,
சென்னை.




III 10, சேக்கிழார் தெரு,
செங்கற்பட்டு.
20–11–'49

அன்புள்ள அப்பா அவர்களுக்கு, வணக்கம்.

நான் இங்கு மாணவர் இல்லத்தில் இருந்துகொண்டு படித்துவருகிறேன். தாங்கள் சொன்னபடியே கெட்டிக்கார மாணவருடன் பழகிவருகிறேன்; தீய மாணவர்களுடன் சேருவதில்லை. பெரியோர் சொற்பொழிவுகளைக் கேட்டுக் குறிப்புக்கள் எடுத்துவருகிறேன்; நாள்தோறும் பத்திரிகைகளைத் தவருது படித்து வருகிறேன்; வரும் டிசம்பர் விடுமுறையில் கிராமத்திற்கு வருவேன்; என் வணக்கத்தைத் தாயாருக்குக் கூற வேண்டுகிறேன். இங்ஙனம்,

தங்கள் அன்புள்ள மகன்,
வ. சுந்தரமூர்த்தி

திருவாளர்
மா. வடிவேல் முதலியார் அவர்கள்,
மேட்டுத்தெரு, கரும்பாக்கம். (செங்கற்பட்டு ஜில்லா)

| | | |
|---|---|---|
| பவணந்தி | இளங்கோ | வேண்டுகிறேன் |
| கரும்பாக்கம் | சேக்கிழார் | கெட்டிக்கார |

## அரும்பொருள்

பணிவுள்ள - தாழ்மையுள்ள. கெட்டிக்கார - திறமையான.

## பயிற்சி

1. உன் படிப்பைப்பற்றி உன் தாயாருக்கு ஒரு கடிதம் எழுது.

2. உன் பள்ளி மாணவர் கழகக் கூட்டத்தைக் குறித்து அழைப்பு எழுது.

3. உங்கள் பள்ளி மாணவர் பந்தாட்டத்தில் வெற்றிபெற்றது பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

4. பள்ளி மாணவர் கழகக் கூட்ட நிகழ்ச்சியை உன் தந்தையாருக்குக் கடிதம் மூலம் தெரிவி.

5. அன்புள்ள, பணிவுள்ள, வணக்கம், தீய மாணவர், குறிப்புகள், ரயில்வே பார்சல், துன்பம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

6. மழை, சிறிது, நனைய, துன்பம், தீய, கிராமம், வெற்றி—எதிர்ச் சொற்கள் கூறு.

## இலக்கணம்

### காலம்

| 1 | 2 | 3 |
|---|---|---|
| படித்தான் | படிக்கிறான் | படிப்பான் |
| குதித்தான் | குதிக்கிறான் | குதிப்பான் |
| வந்தான் | வருகிறான் | வருவான் |
| போனான் | போகிறான் | போவான் |

முதல் வரிசையிலிருக்கும் சொற்கள் தொழில் நடந்துவிட்டதைக் காட்டுகின்றன. தொழில் நடந்துவிட்டதைத் தெரிவிப்பது இறந்தகாலம் எனப்படும்.

இரண்டாவது வரிசையில் இருக்கும் சொற்கள் தொழில் நடைபெறுவதைக் காட்டுகின்றன. தொழில் நடைபெறுவதைத் தெரிவிப்பது நிகழ்காலம் எனப்படும்.

மூன்ருவது வரிசையில் இருக்கும் சொற்கள் தொழில் நடக்கப்போவதைக் காட்டுகின்றன. தொழில் நடக்கப்போவதைத் தெரிவிப்பது எதிர்காலம் எனப்படும்.

வினைச்சொற்களுக்கும் அதாவது வினைமுற்றுகளுக்கும் பெயர்எச்சங்களுக்கும், வினைஎச்சங்களுக்கும் இந்த மூன்று காலமும் உண்டு.

நடந்தான், ஓடுகிருன், பாடுவான், விழுந்தான்—இவற்றின் காலம் என்ன? இவற்றை மற்ற இரண்டுகாலச் சொற்களாக மாற்றிக் கூறு.

# 21. கடிதத்தின் பயணம்

1. முருகா, நான் கொண்டுவந்த செய்தியை நீ படித்து முடித்தாய். என் கதை உனக்குத் தெரியுமா? கூறுகிறேன், கேள்.

2. என் பெயர் **அஞ்சல் அட்டை**; ஆங்கிலத்தில் போஸ்டு கார்டு எனப்படும். முக்காலணு கொடுத்தால் அஞ்சல் நிலையத்தார் என்னைக் கொடுப்பார்கள். என்னை விட மிகுந்த செய்தி கொண்டு வருபவன் எனக்கு மூத்த அஞ்சல் உறை. அஞ்சல் நிலையத்தில் இரண்டணு அளித்தால் அஞ்சல் உறையைப் பெறலாம்.




3. சென்னையிலுள்ள **மணிமேகலை** என்னும் மாணவி என்னை முக்காலணுவிற்கு வாங்கினுள்; உனக்குத் தெரிவிக்க விரும்பிய செய்திகளை என் மேல் எழுதினுள்; பிறகு முகவரி எழுதித் தெருக்கோடியில் இருக்கும் அஞ்சல் பெட்டியில் போட்டுவிட்டாள்.

4. நான் அஞ்சல் பெட்டியில் சற்று நேரம் கிடந்தேன். பிறகு, அஞ்சல்காரர் என்னையும் என்போன்று பெட்டியில் கிடந்த பிறவற்றையும் அஞ்சல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றூர்; சென்னை என்ற பெயரும், தேதியும் அடங்கிய முத்திரையை என் தலைமீது இட்டார்; பிறகு என்னைத்

திருச்சிக்குப் போக வேண்டிய பிற காகிதங்களுடன்



சேர்த்து ஒரு பெரிய பையில் போட்டுக் கட்டினர். நான் மற்றவைகளுடன் சேர்ந்து பைக்குள் கிடந்தேன்.

5. நானிருந்த பை மற்றப் பைகளுடன் ஒரு மோட்டார் வண்டியில் ஏற்றப்பட்டது. நான் பல தெருக்கள் வழியே மோட்டார் வண்டியில் பயணம் செய்தபின், பெரிய அஞ்சல் நிலையம் போய்ச் சேர்ந்தேன். அங்கு இருந்தவர்கள் பைகளை ஊர் வாரியாகப் பிரித்தனர்; ஒவ்வொரு பாதையிலுமுள்ள பல ஊர்களுக்குரிய பைகளை, அவ்வப்பாதைகளில் செல்லும் புகை வண்டிகளுக்கு அனுப்பிவைத்தனர்.

6. நான் இருந்த பை, தென் இந்தியப் புகை வண்டிப் பாதையில், திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் ஏற்றப்பட்டது. புகை வண்டியில் நானிருந்த பை அவிழ்த்துக் கொட்டப்பட்டது. கடிதங்கள் மாவட்ட வாரியாகப் பிரிக்கப்பட்டுத் தனித் தனிப் பைகளாகக் கட்டப்பட்டன.



திருச்சி சந்திப்பு வந்தவுடன் நான் இருந்த பை அங்கிருந்த அஞ்சல் நிலைய அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது.

7. நான் இவ்வண்ணம் நீண்ட தொலை புகை வண்டிப் பயணம் செய்து சென்னையிலிருந்து திருச்சி வந்து சேர்ந்தேன். திருச்சியில் என்மீது திருச்சிராப்பள்ளி என்னும் ஊர்ப் பெயரும் வந்த தேதியும் முத்திரையிடப்பட்டது. பிறகு

ஓர் அதிகாரி பேட்டை வாரியாக எங்களைப் பிரித்துக் கட்டினர். பேட்டை அஞ்சல் நிலையத்தாரிடம் நாங்கள் ஒப்படைக்கப்பட்டோம். பேட்டை அஞ்சல் நிலையத்தில் நாங்கள் தெரு வாரியாகப் பிரிக்கப்பட்டோம். நீ வசிக்கும் தெருவுக்குடைய அஞ்சல்காரரிடம் நான் ஒப்படைக்கப்பட்டேன். அவர் என் முன்புறம் எழுதப்பட்டுள்ள முகவரியைப் படித்து, அது உனக்குரிய கடிதம் எனத் தெரிந்து, உன் வீட்டைத் தேடிவந்து உன்னிடம் கொடுத்தார். இதுதான் என்னுடைய பயணத்தின் கதை. என்னைப் போலவே, அஞ்சல் உறைகள், பார்சல்கள், பணம் அனுப்பியதற்குரிய பட்டிகள் முதலியவைகளும் பயணம் செய்கின்றன.



| | | |
|---|---|---|
| அஞ்சல்அட்டை | மணிமேகலை | ஊர்வாரி |
| போஸ்டுகார்டு | தெருக்கோடி | பேட்டை |
| அஞ்சல்உறை | முத்திரை | பார்சல் |

### அரும்பொருள்

அஞ்சல்அட்டை - தபால் கார்டு. சந்திப்பு - ஜங்ஷன். முகவரி- விலாசம். அஞ்சல்உறை - கவர். பார்சல் - தபால் மூலம் கட்டுக் கட்டி அனுப்பப்படும் சாமான்கள். பட்டி - ஜாப்தா.

### கேள்விகள்

1. அஞ்சல் அட்டை, அஞ்சல் உறை—இவை யாவை? இவற்றின் விலை என்ன? இவை எங்குக் கிடைக்கும்?

2. மணிமேகலை எழுதிய கடிதம் முதலில் எங்குச் சென்றது?

3. முத்திரையிட்டபின் கடிதம் எங்குக் கொண்டுபோகப் பட்டது?

4. கடிதம் புகை வண்டியில் என்ன செய்யப்பட்டது ?

5. திருச்சி போனவுடன், கடிதம் என்ன ஆனது ?

6. அஞ்சல் அட்டையைப்போலப் பயணம் செய்பவை இன்னும் என்னென்ன உண்டு ?

## பயிற்சி

I. 1. அஞ்சல் அட்டையின் பயணக் கதையை மணிமேகலையே கூறுவதுபோலக் கூறு.

2. நீயே காகிதத்தின் பிரயாணம் பற்றிக் கூறுவதுபோல எழுது.

3. கதை, அஞ்சல் அட்டை, மாணவி, விரும்பிய, தெருக் கோடி, முத்திரை, பைக்குள், புகை வண்டியில், பேட்டை வாரியாக, முகவரி—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

4. தடித்த சொல்லுக்கு எதிர்ச் சொல் கூறு :

கையில் காசு இருக்கிறதா——— ?

என் கதை உனக்குத் தெரியுமா——— ?

இராமன் ஒரு மாணவன். சீதை ஒரு———.

என் கேள்விக்குத் தக்க ——— எழுது.

கடிதத்தின் முன்புறம் முகவரியும்———விவரமும் உள.

சூரியன் உதிப்பது கிழக்கே ; மறைவது ———.

II. 1. மாளிகை, செல்வன், ஏழை, குடிசை, மகன், பேனு, மாம்பழம், தங்கை, பசு, மனைவி, புலவர், சாவடி, நூல், தலைவன், சிவன், கை, குருடன், முருகன், மூக்கு, நோயாளன், மந்தை, ஆடு, அமாவாசை, கோதுமை, உணவு—இச்சொற்கள் என்னென்ன திணைகள் என்பதைக் கூறு.

2. சொல், ஓடு, ஆடு, படி, அடி, குடி, ஆறு—இவற்றைப் பெயர்ச் சொற்களாகவும் வினைச் சொற்களாகவும் வருமாறு வாக்கியங்கள் எழுது.

3. 1. தமிழரசி பாட்டுப் பாடினாள்.
2. மணிமேகலை பாடம் படித்தாள்.
3. புகழேந்தி பந்து விளையாடுகிறான்.
4. முடியரசன் நாளை வருவான்.
5. கலைச்செல்வி கணக்குப் போடுகிறாள்.
6. கலைக்கோவன் பழம் தின்பான்.

இவ்வாக்கியங்களிலுள்ள முக்கால வினைமுற்றுகளையும் பின் வரும் கட்டங்களில் எழுது :—

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| --- | --- | --- |
| | | |

# 22. கப்பல்

1. பழங்காலத்தில் கடல் கடந்து செல்வதற்கு மரத்தால் செய்த கப்பல்கள் பயன்பட்டன. அவற்றிற்கு மரக் கலங்கள் என்பது பெயர். பிறகு கடலில் நெடுந்தொலை செல்வதற்கு, மரக்கலங்களில் அடுக்கடுக்காகப் பாய்கள் கட்டப்பட்டன. அவற்றிற்குப் பாய் மரக்கலங்கள் என்பது பெயர். பாய் மரக் கலங்களில் நம் நாட்டுப் பழங்கால மக்கள் நெடுந்தொலை சென்று வாணிகம் செய்தார்கள்; கடல் போர் செய்து, மலேயா, ஜாவா போன்ற பல நாடுகளை வென்றார்கள்.

2. பாய் மரக்கலங்கள் நீண்ட காலமாக உலக மக்களால் பயன்படுத்தப்பட்டன. பிறகு அவை மாறி நீராவியால் ஓடும் கப்பல்கள் செய்யப்பட்டன. முதன்முதல் நீராவிக்கப்பல் 1812–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கடலில் மிதக்கவிடப் பட்டது. இம்முதல் நீராவிக் கப்பலைக் கட்டியவர் பெயர் ஜான் உட் என்பதாகும்.

3. இவர் கட்டிய கப்பலின் பெயர் 'கோமட்' என்பதாகும். இம்முதற்கப்பல் 42 அடி நீளமும் 11 அடி அகலமும் உடையதாகும். இது மணிக்கு ஐந்து மைல் தொலை போயிற்று. 1788–ஆம் ஆண்டிலேயே முதன்முதல் நீராவிக் கப்பலுக்குரிய இஞ்சின் கண்டுபிடிக்கப்பட்டு, 1801–இல் "சார்லட் டன்டாஸ்" என்னும் கப்பலும், 1807-ல் 'கிளர் மாண்ட்' என்னும் கப்பலும் கட்டப்பட்டன. எனினும் இவை கடற் பயணம் செய்யவில்லை.

4. இப்போது, நீராவிக்கப்பல்கள் பல மாறுதல்கள் செய்யப்பட்டு, மிதக்கும் மாளிகைகள்போல் ஆக்கப்பட்டிருக்கின்றன. பெரும் பெரும் கடல்களை யெல்லாம் விரைவில் கடந்துபோகக்கூடிய கப்பல்கள் இன்று இருக்கின்றன. கடலில் பயணம் செய்வதுபோன்ற உணர்ச்சியே இல்லாமல்,

ஒரு நாகரிக நகரத்தில் இருப்பதுபோன்ற உணர்ச்சியுடன் பயணம் செய்வதற்கேற்ற கப்பல்கள் இன்று பல இருக்கின்றன. அவற்றுள் ஒன்றைப்பற்றி இங்குப் படிப்போம்.



5. குயின் எலிசபத் என்பது உலகிற் பெரிய கப்பல். இது அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே ஓடுகிறது. இக்கப்பல் 3515 பேரை ஏற்றிச் செல்லும். இக்கப்பலில் வேலை செய்பவர்கள் மட்டும் 1200 பேர் ; 2315 பிரயாணிகள் இதில் பயணம் செய்யலாம். இக்கப்பல் 234 அடி உயரமும், 118 அடி அகலமும், 1031 அடி நீளமும் உடையது.

6. இக்கப்பலில் பந்து விளையாடுவதற்கு இடம், வெயிலிற் உலாவுதற்கு இடம், இரண்டு சினிமாக் கொட்டகைகள், கடைகள், புகைப்படம் எடுக்கும் கடை, தினசரிச் செய்தித்தாள் வெளியிடும் நிலையம், ஒரு பாங்க், இன்னிசை அரங்கு, உடற்பயிற்சிச் சாலை, ஆயிரக்கணக்கான பல மொழி நூல்களுள்ள நூல் நிலையம், நடன அரங்கம், வானொலி நிலையம், அறுவைச் சிகிச்சைக்குரிய வசதியுடன்கூடிய

மருத்துவ மனை, முடியலங்கரிக்கும் கடை, உணவருந்தும் மண்டபம், நீந்தும் குளம், யூத, கிறித்தவக் கோயில்கள் முதலியவை இருக்கின்றன. இக்கப்பல் பதினுன்கு மாடிகளை யுடையது. மேலே போகவும் கீழே வரவும் முப்பத்தைந்து மின்சாரத் தூக்குகள் (Lifts) இருக்கின்றன.

7. இக்கப்பல் நடுக்கடலில் போகையில் வீட்டில் உள்ளவர்களுடன் பிரயாணிகள் டெலிபோன்மூலம் பேசலாம்; கப்பலிலிருந்தபடி தந்தி அடிக்கலாம். அன்றுடச் செய்திகளைக் கப்பலிலிருந்தபடி ரேடியோவில் கேட்கலாம்; கப்பலில் வெளியிடப்படும் நாட்செய்தித்தாள் மூலம் அறியலாம்.

8. 'குயின் எலிசபத்' நீராவிக்கப்பல் அன்று; எண்ணெயால் ஓடும் கப்பல். இது மணிக்கு 30 கல் தொலை போகும். இக்கப்பல் இரண்டே ஆண்டுகளில் கட்டப்பட்டு, 1938-இல் முதன்முதலாகப் பயணத்திற்கு விடப்பட்டது. இதனை 'மிதக்கும் நகரம்' என்று கூறுவது முற்றிலும் பொருந்தும்.

| | | |
|---|---|---|
| கடல்கடந்து | நீராவிக்கப்பல் | நடன அரங்கம் |
| மரக்கலம் | மிதக்கும் மாளிகை | அறுவைச் சிகிச்சை |
| நெடுந்தொலை | குயின் எலிசபத் | முடியலங்கரிப்பு |
| மலேயா | புகைப்படம் | மின்சாரத் தூக்கு |
| ஜாவா | பாங்க் | டெலிபோன் |

## அரும்பொருள்

புகைப்படம் - போட்டோ. இன்னிசை அரங்கு - சங்கீத மண்டபம். வானெலி - ரேடியோ. அறுவைச் சிகிச்சை - உடம்பின் புண்ணை அறுத்துச் செய்யும் வைத்தியம். முடியலங்கரிக்கும் கடை - நாவிதர் கடை.

## கேள்விகள்

1. பழங்காலக் கப்பல்கள் யாவை?

2. கடலில் நெடுந்தொலே செல்லும் மரக்கலங்கள் எப்படி இருக்கும்?

3. மரக்கலங்கள் மாறி நீராவிக் கப்பலானது எப்போது?

4. முதலில் நீராவிக் கப்பல் கட்டியவர் யார்?

5. இக்காலக் கப்பல்கள் எப்படியிருக்கின்றன?

6. 'குயின் எலிசபத்' எத்தகைய கப்பல்?

## பயிற்சி

1. 'குயின் எலிசபத்' கப்பலேப் பற்றி, அதில் நீ பயணம் செய்ததாகக் கருதி, இருபது வரிகள் எழுது.

2. பாய்மரக்கலம், வாணிகம், பழங்காலம், நீராவிக்கப்பல், புகைப்படம், முடியலங்காரம், உலாவுதற்கு, வானெலி, இசையரங்கு, நடன அரங்கு, மருத்துவ மனே, மின்சாரத் தூக்கு— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

(1) நீ கடைக்குப்போ. (2) நீங்கள் உட்காருங்கள். (3) நான் வேலேக்குப் போகிறேன். (4) நாங்கள் செல்கிருேம். (5) அவர்கள் நல்லவர்கள். (6) அவள் நன்ருகப் பாடுவாள்.

இவ்வாக்கியங்களிலுள்ள மூவிடத்துப் பெயர்களேயும் பின் உள்ள கட்டத்தில் எடுத்து எழுது:—

| தன்மை | முன்னிலே | படர்க்கை |
|---|---|---|
| | | |



## 23. வெண்காயப் பயிர்

1. வெண்காயம் உணவு வகையில் ஒரு சிறந்த சத்து மிகுந்த பொருளாகும். இது நம் நாட்டைச் சேர்ந்ததாகும். இது உடலுக்கு உரம் தரக்கூடியது ஆகையால், இப்பொழுது உலகின் பல பாகங்களில் பயிரிடப்படுகின்றது. இது நிலத்திற்கு அடியில் விளையும் கிழங்கு இனத்தைச் சேர்ந்தது.

2. வெண்காயம் பயிரிடச் செழிப்புள்ள நிலம் வேண்டும். நிலத்தை நன்கு பதப்படுத்திய பிறகே வெண்காயத்தைப் பயிரிடவேண்டும். வெண்காயம் பயிரிடுவதற்கு முன்னால், நிலத்தை மடக்கி ஏழெட்டு முறையாவது ஆழமாய் உழுதல்வேண்டும். பிறகு நிலத்திலுள்ள மண் கட்டிகளை எல்லாம் நன்றாக உடைத்துத் தூளாக்கிவிட வேண்டும். இவ்வாறு நிலத்தை நன்றாகப் பண்படுத்திய பிறகு, பத்து அடி நீளமும், பத்து அடி அகலமும் உள்ள சதுரப் பாத்திகள் கட்டவேண்டும். பிறகு ஒவ்வொரு பாத்திக்கும் பக்கத்தில் தண்ணீர் நன்றாய்ப் பாய்வதற்கு ஏற்றவாறு சிறு கால்வாய் கட்டவேண்டும். இவ்வாறு செய்து முடித்த பிறகு, வெண்காய நாற்றுக்களை நடவேண்டும்.

3. வெண்காய வித்து கடுகு போலக் கறுப்பாகவும் சிறியதாகவும் இருக்கும். வெண்காயம் பயிரிட விரும்பு பவர்கள், மார்கழி மாதத்தில் நிலத்தில் வெண்காய வித்துக் களை விதைப்பார்கள். சிறிது நாளைக்குள் வித்துக்கள் முளைத்து நாற்றுக்களாகும். நாற்றுக்கள் வளர்ந்து சிறி தளவு பெரியவை ஆனதும் உழவர்கள் இவற்றைப் பிடுங்கி, முன்னே கூறியபடி பண்படுத்தி வைத்திருக்கும் பாத்திகளில் நடுவார்கள். ஒவ்வொரு நாற்றுக்கும் இடையில் ஆறு அங் குலம் இடம் விட்டு நடவேண்டும். இந்த நாற்று நடும் வேலை பெரும்பாலும் தை மாதத்தில் நடைபெறும்.

4. வெண்காயம் வளரும்போது பாத்திகளில் எப்போ தும் ஈரம் இருக்கவேண்டும். ஈரம் மிகுதியாய் இருந்தால் தான் கிழங்குகள் பருமனாய் வளரும். ஆகையால் வெண் காய நாற்றுக்களை நட்டதும் மூன்று வாரங்கள் வரையிலா வது, வாரத்திற்கு மூன்று முறை நீர்ப்பாய்ச்சவேண்டும்.

. வெண்காய நாற்று நட்ட இரண்டு வாரங்கள் கழிந்த பிறகு சாம்பலையாவது ஆமணக்குக்கொட்டைப்பிண்ணாக்கை யாவது பாத்திகளில் தெளிக்கவேண்டும். இவ்வாறு எரு இடுவதால் வெண்காயம் பருத்து வளரும்.

6. வெண்காயம் ஐந்து மாதப் பயிர். நாற்று நட்ட நான்காவது மாதத்தில் மேலே உள்ள இலைகள் பழுக்கும்; அடி இலைகள் உலரும். இந்த இலை வெண்காயத் தாள் எனப் படும். அடியில் வெண்காயம் முற்றிவிட்டது என்பதற்கு இலைகள் பழுத்து உலருவதே அறிகுறி. இந்நிலையில், மேல் உள்ள இலைகளை அரிந்து, வெண்காயத்தை தோண்டி எடுத் தல் வேண்டும். பிறகு பரப்பி உலரவைத்தால் நான்கைந்து நாட்களில் ஈரம் வற்றி வெண்காயம் உலர்ந்துவிடும்.

7. வெண்காயமும் வெண்காயத்தாளும் நல்ல உணவுப் பொருள்கள்; சுவையும் சத்தும் உடையவை; மூளையை

உரப்படுத்தி, உடலுக்குக் கொழுமை ஊட்டுபவை; பசியை மிகுதிப் படுத்தி, இரத்த வெப்பத்தைத் தணிக்கக் கூடியவை.

| | | |
|---|---|---|
| வெண்காயம் | பண்படுத்திய | பருமன் |
| சத்துமிகுந்த | நாற்று | ஆமணக்கு |
| செழிப்புள்ள | வித்து | அறிகுறி |
| பதப்படுத்திய | கடுகு | உலர்ந்த |
| மடக்கி மடக்கி | பாத்தி | தாள் |

## அரும்பொருள்

சத்து - போஷாப்பு. உரம் - பலம். பருமன் - பெரியது. ஆமணக்குக் கொட்டை - முத்துக் கொட்டை. சுவை - ருசி. வெப்பம் - சூடு.

## கேள்விகள்

1. வெண்காயம் எந்நாட்டைச் சேர்ந்தது?
2. வெண்காயம் பயிரிட நிலத்தை எப்படிப் பண்படுத்த வேண்டும்?
3. வெண்காய வித்து எப்படி இருக்கும்? அதை எப்போது விதைக்க வேண்டும்?
4. நாற்று நடுவது எப்போது?
5. வெண்காயம் பருத்து வளர என்ன செய்ய வேண்டும்?
6. வெண்காயம் முற்றிவிட்டதை எப்படி அறிய முடியும்?
7. வெண்காயத்தை எடுப்பது எப்படி?
8. இது எத்தனை மாதப் பயிர்?
9. வெண்காயம் எத்தகைய உணவுப்பொருள்?

## பயிற்சி

1. உணவு வகை, உரம், கிழங்கு இனம், செழிப்புள்ள நிலம், பண்படுத்தி, கால்வாய், நாற்று, ஈரம், நீர்ப்பாய்ச்ச, பிண்ணாக்கு, அடையாளம், உலரவைத்தல், சுவையும் சத்தும், கொழுமை, தணிக்க, வெப்பம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. மிகுந்த × குறைந்த, சேர்ந்தது × சேராதது, வேண்டும் × வேண்டா—இவை எதிர்ச் சொற்கள். இவ்வாறு இப்பாடத்திலிருந்து இன்னும் ஐந்து எதிர்ச் சொற்களைக் கூறு.

3. தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்கு ஏற்ற வேறு சொற்களைக் கூறு :—

1. உபாத்தியாயர் சீக்கிரம் வருவார்.
2. வெண்காயம் தேசத்துக்குப் போஷாப்பு அளிக்கும்.
3. தடாகத்தில் இறங்கி ஸ்நானம் செய்.
4. மாதா பிதா தெய்வம் ஆவார்கள்.

## இலக்கணம்

### இரட்டைச் சொல்

வண்டி தடதட என்று ஓடியது. அவன் கடகட என்று புரண்டான்—இவ்வாறு வருபவை இரட்டைச் சொற்கள் ஆகும்.

மடமட, பளபள, படபட, சிலுசிலு, சலசல, மளமள, கலகல, நறநற, கறகற—இவை அனைத்தும் இரட்டைச் சொற்கள்.

இரட்டையாக இருக்கும் இச்சொற்களில் ஒன்று தனித்து நின்றால் பொருள் தராது, மட, பட என்றெல்லாம் தனிப்படுத்திக் கூறினால் பொருள் வராது. இவை இரண்டாகச் சேர்ந்து நின்றே பொருள்தரும்.

# 24. நாகர் தீவில் சாதுவன்

## (நாடகம்)

### காட்சி—1

**இடம் :** நாகர் தீவு

**காலம் :** காலை

**ஆட்கள் :** நாகர் இருவர், சாதுவன்

[காவிரிப்பூம்பட்டினத்தைச் சேர்ந்த சாதுவன் என்ற வணிகன், கப்பலில் சென்று வாணிகம் செய்து, பெரும் பணம் சம்பாதித்துத் திரும்புகிறான். வழியில் கப்பல் கடலில் கவிழ்ந்து விடுகிறது. சாதுவன் மட்டும் தப்பி நாகர் தீவின் கரை போய்ச் சேருகிறான்.]

**சாதுவன் :** (தனக்குள்) நான் வந்த கப்பல் முழுகி விட்டது; அதில் இருந்த அனைவரும் முழுகிவிட்டனர் போலும்! இந்த இடம் யாருடையதோ! இது எந்த நாடோ! நான் இரண்டு நாள் உணவு இல்லாமல் கடலில் நீந்தி வந்தேன். பசியோ குடலைப் பிடுங்குகிறது. தூக்கம் கண்ணை இழுக்கிறது. (எதிரில் இருந்த மரத்தைக்கண்டு) இந்த மரத்தடியில் சிறிது படுத்துத் தூங்குவது நல்லது. (மரத்தடியில் படுத்து ஆழ்ந்து தூங்குகிறான்.)

[நாகர் இருவர் அங்கு வந்து சாதுவனைக் காணுகின்றனர். அவர்கள் மனித இறைச்சியைத் தின்பவர்கள். ஆதலால், சாதுவனைத் தின்றால் நன்றாய் இருக்கும் என்றுபேசிக்கொள்ளுகின்றனர். அவர்களுடைய பேச்சுச் சத்தம் கேட்டுச் சாதுவன் விழித்துக் கொள்ளுகிறான். சாதுவன் நாகர் மொழி அறிந்தவன். ஆதலால் அவர்கள் மொழியிலே பேசுகிறான்.]

**சாதுவன் :** (நாகர் மொழியில்) அண்ணன்மாரே, நீங்கள் யார்? இந்த இடத்திற்குப் பெயர் யாது?

முதல் நாகன் : (வியப்புற்று) அட அண்ணே, இவர் நமது மொழி பேசுகின்றாரே !

இரண்டாம் நாகன் : ஆம். இங்கு வந்த எந்த வணிகருக்கும் நம் மொழி தெரிந்ததில்லை. இவர் நம் மொழி தெரிந்தவர் போலும் ! இவரை நம் குருநாதரிடம் அழைத்துப் போகவேண்டும்.

மு. நா : அதுதான் சரி.

இருவரும் : ஐயா, தாங்கள் யார் ? இது நாகர் தீவு. நாங்கள் நாகர்கள்.

சாதுவன் : அண்ணன்மாரே, நான் காவிரிப்பூம்பட்டினத்து வணிகன். வாணிகத்திற்காகச் சென்று திரும்புகையில் கப்பல் உடைந்து, கடலில் நீந்தி இங்கு வந்தேன்.

இருவரும் : சரி, வாரும். எங்கள் குருவிடம் போகலாம்.

(மூவரும் செல்கின்றனர்.)

## காட்சி—2

இடம் : குருவின் இருப்பிடம்

காலம் : நடுப்பகல்

ஆட்கள் : சாதுவன், குரு, நாகர்கள்.

[நாகர்கள் குருவின் இருப்பிடத்திற்குச் சாதுவனை அழைத்துச் செல்கின்றனர். குரு எலும்புக் குவியலை ஆசனமாக ஆக்கி, அதன்மீது உட்கார்ந்திருக்கிறார். அவர் அருகில் கள் குடங்கள் இருக்கின்றன ; இறைச்சித் துண்டங்கள் சிதறிக் கிடக்கின்றன. அவர் மனைவி அருகில் நிற்கிறார். அவர் சாதுவனை வரவேற்கிறார்.]

குரு : நீ இங்கு வந்த காரணம் என்ன ?

சாதுவன் : நான் வந்த கப்பல் உடைந்ததால் இங்குக் கரை ஏறினேன்.

குரு : நீ எங்கள் மொழி பேசுவதால் உன்னை நான் விரும்புகின்றேன். (நாகர்களைப் பார்த்து) கடலில் கஷ்டப்பட்டு வந்திருக்கும் இவருக்கு இறைச்சியும் கள்ளும் வேண்டும் வரை கொடுத்துப் பசி ஆற்றுங்கள்.

சாதுவன் : ஐயா, நான் இறைச்சி உண்பதில்லை; கள்ளும் அருந்துவதில்லை.

குரு : இறைச்சி உண்ணாமல் உயிர் வாழ்வது எப்படி ?

சாதுவன் : ஒன்றன் உயிரைக் கொன்று உண்பது அநீதி. உயிரைப் படைக்க முடியாத நாம், அதனைப் போக்குதல் நீதியாகுமா ?

குரு : ஆம். நீ கூறுவது உண்மையே. இனி நாங்கள் உயிர்களைக் கொன்று புசிப்பதில்லை. நாங்கள் இதுவரை இத்தீவுக்கு வந்த பலரைக் கொன்று தின்றிருக்கிறோம்; பலர் பொருளைக் கொள்ளையிட்டிருக்கிறோம்; உன்னால் இப்போது அறிவு பெற்றோம்; இனி எவரையும், எதனையும் கொல்வதில்லை. நீ நல்லவன்; இங்குள்ள செல்வத்தில் உனக்கு வேண்டிய அளவு எடுத்துச் செல்.

[சாதுவன் செல்வத்தைப் பெற்று, அச்சமயம் அங்கு வந்த சந்திரதத்தன் என்பவனது கப்பலில் ஏறிக் காவிரிப்பூம் பட்டினம் போய்ச் சேர்ந்தான்.]

| | | |
|---|---|---|
| இறைச்சி | போக்குதல் | சாதுவன் |
| விழித்து | நீதியாகுமா | நாகர் |
| உண்ணாமல் | கொள்ளை | இருப்பிடம் |

அரும்பொருள்

வாணிகம் - வியாபாரம். இறைச்சி - மாமிசம். ஒன்றன் - ஒன்றினுடைய. புசிப்பதில்லை - தின்பதில்லை.

### கேள்விகள்

1. சாதுவன் என்பான் யாவன் ?
2. அவன் ஏன் நாகர் தீவு சென்ருன் ?
3. நாகர் சாதுவனைக் கண்டு என்ன நினைத்தனர் ?
4. குரு சாதுவனை எப்படி நடத்தினுர் ?
5. சாதுவன் குருவிடம் கூறியது என்ன ?
6. குரு கடைசியில் என்ன செய்தார் ?

### பயிற்சி

1. குரு இக்கதையைக் கூறுவதுபோலக் கூறு.
2. இதனைச் சாதுவனே கூறுவதுபோலக் கூறு.
3. நீ இந்நாடகத்திலிருந்து அறிவன யாவை ?

## அடுக்குத் தொடர்

ஓடுஓடு, தீதீதீ, பாம்பு பாம்பு, வாவாவா, நில்நில், இவ்வாறு ஒரே சொல் ஒன்றன்பின் ஒன்ருக அடுக்கி வந்து வியப்பு, அச்சம், விரைவு முதலியவற்றைக் காட்டுவது அடுக்குத் தொடர் எனப்படும். அடுக்குத் தொடராக வரும் சொற்களைத் தனித்தனியே பிரித்தாலும் பொருள்தரும். ஓடுஓடு என்பதில் ஓடு என்று ஒன்றை மட்டும் தனியே பிரித்தாலும் பொருள்தரும். இரட்டைச் சொல்லில் இவ்வாறு தனியே பிரிக்க முடியாது.

இரட்டைச் சொல்லுக்கும், அடுக்குத் தொடருக்கும் உள்ள வேறுபாட்டைக் கவனி.

# 25. செய்யுள் பாடம்

## 1. தமிழ்மொழி வாழ்த்து

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்தத னைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே

2. ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே.

—பாரதியார்

## 2. நறுந்தொகை

1. கல்விக்கு அழகு கசடற மொழிதல்.
2. செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்.
3. மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல்.
4. உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்.
5. அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்.
6. வறியோர்க்கு அழகு வறுமையில் செம்மை.
7. தேம்படு பனையின் திரள்பழத்து ஒருவிதை
வான்உற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவற்கு இருக்க நிழலாகாதே.

8. தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒருவிதை
தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழலாகும்மே.
9. அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது.
10. சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.
11. அரைக்கினும் சந்தனம் தன்மணம் அறாது.
12. புகைக்கினும் கார்அகில் பொல்லாங்கு கமழாது.
13. கலக்கினும் தண்கடல் சேறாகாது.
14. ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.
15. நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க் கொள்ளாதே.
16. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.
17. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதரா கும்மே.
18. எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருக வென்பர்.
19. நாற்பால் குலத்தின் மேற்பால் ஒருவன்
கற்றில னாயின் கீழிருப் பவனே.
20. குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடை மெலிந்து ஊரூர் நண்ணினும் நண்ணுவர்.
21. சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.

22. அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசரோடு இருந்து அரசாளினும் ஆளுவர்.
23. பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினல்
மெய் போலும்மே மெய் போலும்மே.
24. மெய்யுடை ஒருவன் சொல மாட்டாமையால்
பொய் போலும்மே பொய் போலும்மே.
25. அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.

—அதிவீரராம பாண்டியன்

## 3. மூதுரை

### உதவிக்குப் பயன் கருதாதே!

1. நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி
'என்று தருங்கொல்!' எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாள்உண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

### நல்லவர்க்கு உதவி செய்

2. நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே ;—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தரர்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர்.

### உருவம் கண்டு இகழாதே

3. மடல் பெரிது தாழை ; மகிழினிது கந்தம் ;
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா ;—கடல் பெரிது
மண்ணீரும் ஆகாது ; அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்.

அறிஞரிடம் அன்புகொள்

4. நற்று மரைக்கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற்போல்
கற்றூரைக் கற்றூரே காமுறுவர் ;—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் ; முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்.

மன்னவனைவிடக் கற்றவனே மேல்

5. மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை ; கற்றோர்க்குச்
சென்றஇட மெல்லாம் சிறப்பு.

மேன்மக்கள் தன்மை

6. அட்டாலும் பால்சுவையிற் குன்றுது ; அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர் ;
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளே ; சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

—ஔவையார்

## 4. நல்வழி

அறம் செய்பவர் பெரியோர்

1. சாதி இரண்டொழிய வேறில்லை ; சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி.

### நல்லவர்கள் தன்மை

2. ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டும் ;—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து.

### உழவின் சிறப்பு

3. ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே ; ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை ; கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

### வரவுக்கு மேல் செலவு செய்யாதே !

4. ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லானாம் நாடு.

### கருமியாய் இராதே !

5. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்கு
ஆவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப்பணம்.

—ஔவையார்

## 5. சதகங்கள்

### செய்யக்கூடாதவை

1. பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
பெரியோரை முனிதல் வேண்டா ;
பின்ஞென்று முன்ஞென்று பேசியே அவமானப்
பேர்கொண்டு திரிதல் வேண்டா ;
உற்றவர்கள் போலஉட் பகையான வஞ்சகரை
ஒருநாளும் நம்பல் வேண்டா ;
ஒருவருக்குஇச்சையாய்ப் பொய்சொல்லிப் பின்சபையில்
ஊமைபோல் நிற்றல் வேண்டா ;
சற்றுமே பொறுமை இல்லாதவர்கள் சண்டையில்
தான்போய் விலக்கல் வேண்டா ;
தைரியந் தனில்விக்கிர மாதித்தன் என்னினும்
தன்னேயே புகழ்தல் வேண்டா ;
மற்ரெுன்றும் எண்ணுது செய்யல் வேண்டாமென்பர் ;
மணவாள நாராயணன்
மனதிலுரை அலர்மேலு மங்கைமண வாளனே !
வரதவேங் கடராயனே !

—திருவேங்கட சதகம்

## எட்டி பழுத்து என்ன பயன்?

2. கட்டுமாங் கனிவாழைக் கனிபலவின்
கனிகள்உப கார மாகும்
சிட்டரும்அவ் வணம்தேடும் பொருளௌல்லாம்
இரப்பவர்க்கே ஈந்து வாழ்வார்
மட்டுலவும் சடையாரே தண்டலையா
ரேசொன்னேன் வனங்கள் தோறும்
எட்டிமரம் பழுத்தாலும் ஈயாதார்
வாழ்ந்தாலும் என்உண்டாமே!

—தண்டலையார் சதகம்

## 6. சேயை இழந்த தாய்

[ஒரு பெண், பாம்பு கடித்து இறந்த தன் மகனைப் புத்தரின் காலடியில் கிடத்தி, உயிருடன் எழுப்பித் தருமாறு வேண்டுகிருள். இறப்பு ஏற்படாதிருக்கும் வீட்டில் ஒரு கைப்பிடி அளவு கடுகு வாங்கி வருமாறு புத்தபிரான் அவளை அனுப்பிவைக்கிருர். அவள் பல இடங்களுக்குச் சென்று தானறிந்த உண்மையினைப் புத்தபிரானிடம் கூறி, அறிவு பெறுகிருள். இது, அவள் புத்தபெருமானிடம் தானறிந்ததைக் கூறும் பகுதியாகும் :]

1. " ஐயமிடு மனைகளிலே மரணம் என்றும்
அறியாத மனையேதும் இல்லை இல்லை ;
வையகத்தில் பிறப்புளதேல் இறப்பும் உண்டு ;
மாற்றரிய விதிஇதுவென்று உணர்ந்து கொண்டேன்
கையமர்ந்த மகவினையும் கானில் இட்டேன் ;
கண்விழியாப் பிணம்வைத்துக் காப்பது உண்டோ ?
செய்யதிரு வடிபணிந்து போற்றி இந்தச்
செய்தியினைத் தெரிவிக்க வந்தேன் " என்ருள்.

2. மங்கைமனத் தெளிவைஎலாம் உரைத்த உண்மை
வார்த்தையினுல் அறிந்துஅவளை நோக்கி, " அம்மா
எங்கும்இலாப் பொருள்தேடச் சென்று நீயும்,
யான்நினைத்த பொருளினையே பெற்று வந்தாய் ;

தங்கும்இந்த உலகியற்கை மாருது ; அம்மா,
தனயனைநீ எண்ணிமனம் தளர வேண்டா ;
அங்கம் எலாம் வாயாக அழுதிட் டாலும்
அவன் எழுந்து நின் துயரம் அகற்றல் உண்டோ ?

3. " இம்மா நிலத்துஇவ் வுண்மை யெல்லாம்
யானும் அறியச் சொல்கின்றேன் ;
அம்மா நீயும் உன்மகனை
அடக்கம் செய்போ " என்றுரைத்தான்
வெம்மா வினையின் வேர் அறுத்து
விளங்கும் ஞான ஒளிகண்டிங்கு
எம்மா தவரும் தொழுதேத்த
எழிலார் கமலத்து எழுந்தோனே.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

## 7. நாட்டு வணக்கம்

1. எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனை கூறி மனதி லிருத்தியென்
வாயுற வாழ்த்தேனே—இதை

(பல்லவி)

'வந்தே மாதரம் வந்தே மாதரம்'
என்று வணங்கேனே?

2. இன்னுயிர் தந்தெமை யீன்று வளர்த் தரு
ளீந்தது மிந்நாடே—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்தது மிந்நாடே—அவர்
கன்னிய ராகி நிலவினி லாடிக்
களித்தது மிந்நாடே—தங்கள்
பொன்னுட லின்புற நீர்விளை யாடி, இல்
போந்தது மிந்நாடே—இதை

(பல்லவி)

'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனே?

—பாரதியார்

# செய்யுட்பாடக் குறிப்புகள்

## 1. தமிழ் மொழி வாழ்த்து

1. நிரந்தரம் - என்றும் நிலையாக. வானம்+அளந்தது - அனைத்தும் அளந்திடு. வண்மொழி - வளம் மிகுந்த மொழி.

2. இசை - சிறப்பு, புகழ்.

## 2. நறுந்தொகை

1. கசடற - கசடு+அற—குற்றம் நீங்க. மொழிதல்-பேசுதல்.

2. செழுங்கிளை - செழுமையான உறவினர்கள். தாங்குதல் - காப்பாற்றுதல்.

3. வரும்பொருள் - பின்னால் வரப்போவதை முன்னரே ஊகித்தறிந்து கூறுதல்.

4. உண்டி - உணவு.

5. கற்றுணர்ந்து - கற்று+உணர்ந்து, நூல்களைப் படித்து அவற்றில் கூறிய ஒழுக்கங்களை மேற்கொண்டு. அடங்கல் - அமைதி பெறுதல்.

6. வறியோர் - மிகுந்த ஏழைகள். செம்மை - ஒழுக்கம் தவறாமலிருத்தல்.

7. தேம்படு இனிது பொருந்திய. வான்உற - வானம் அளாவிய.

8. தெள்ளிய - தெள்ளி எடுத்த. தெண்ணீர் - தெள்+நீர் - தெளிந்த நீர். கயம் - குளம். நுண்ணிதே - சிறியதே. அண்ணல்- பெருமை பொருந்திய. அணி - அழகு. புரவி - குதிரை. ஆள்- காலாள்.

9. அடினும் - காய்ச்சினும். ஆ - பசு.

11. அருது - நீங்காது.

12. பொல்லாங்கு - கெட்ட நாற்றம்.

13. தண் - குளிர்ந்த.

14. இரு நிலம் - பெரிய நிலமாகிய பூமி. வேர்வீழ்க்குமே - வேரோடி உறுதி தரும்.

15. மூர்க்கர் - தீய குணம் உடையவர். கேண்மை - நட்பு. வேர்க் கொள்ளாது - நிலையாய் இராது.

16. கற்கை - படித்தல்.

17. குலநலம் - குலப்பெருமை.

19. நாற்பால் குலம் - நான்கு சாதிகள். கற்றிலன் - படிக்காதவன்.

20. குஞ்சரம் - யானை. நடைமெலிந்து - நடையில் தளர்ந்து - ஊரூர் - ஊர் ஊராக, நண்ணினும் - அடைந்தாலும்.

21. அறக்கூழ்ச் சாலை - அன்னமிடும் தரும சத்திரம்.

23. சொல் வன்மை - சொல்லும் திறமை.

24. சொல மாட்டாமை - சொல்லும் திறமை யில்லாமை.

## 3. மூதுரை

நல்வழியையும் மூதுரையையும் பாடியவர் ஔவையார். இவர் சிறந்த பெண்பாற் புலவர். இவ்விரண்டிலும் நல்ல ஒழுக்கத்தை வற்புறுத்தும் செய்யுள்கள் அடங்கியிருக்கின்றன.

1. என்று தரும் - எப்பொழுது பயன் தரும். தளரா - சோர்வடையாமல். தாள் - அடி.

2. ஈரமிலா - அன்பில்லாத. ஈந்த - உதவிய. நேர் - ஒப்பாகும்.

3. மடல் - இதழ். தாழை - தாழம்பூ. மகிழ் - மகிழம்பூ. கந்தம் - மணம். மண் நீர் - குளிக்கும் நீர். சிற்றூறல் - சிறிய ஊற்று. உண்ணீர் - அருந்தப் பயன்படும் நீர்.

4. நற்றுமரை - நல்ல தாமரை. கயம் - குளம். காமுறுவர் - விரும்புபவர். கற்பிலா - கல்வி இல்லாத. முதுகாடு - இடுகாடு. உகக்கும் - விரும்பும்.

5. மாசற - குற்றம் நீங்க. சீர்தூக்கின் - ஆராய்ந்தால்.

6. அட்டாலும் - காய்ச்சினாலும். அளவளாய்-மிகநெருங்கி. நட்டாலும் - சினேகம் செய்தாலும்.

## 4. நல்வழி

1. சாற்றுங்கால் - சொன்னால்.
பட்டாங்கில் - சாத்திரத்தில், நூல்களில்.
2. நல்கூர்ந்தார் - வறுமையடைந்தவர்.
3. பழுது - குற்றம். பணி - வேலை.

## 5. சதகங்கள்

(சதகம் என்பது நூறு செய்யுட்களைக் கொண்ட நூல்)

### 1. திருவேங்கட சதகம்

முனிதல் - கோபித்தல். உற்றவர்கள் - நண்பர்கள். எண்ணாது- சிந்திக்காமல். மனதிலுறை - மனதில் + உறை - மார்பில் வாழ்கின்ற.

### 2. தண்டலையார் சதகம்

சிட்டர் - உயர்ந்தவர்கள், அறிஞர்கள். இரப்பவர்கள் - இல்லை என்று கேட்பவர்கள். ஈந்து - கொடுத்து. மட்டு - தேன்.

## 6. சேயை இழந்த தாய்

வையகம் - உலகம். மாற்றறிய - மாற்றுவதற்கு அருமையான. கையமர்ந்த - கையில் இருந்த. மகவு - குழந்தை. கான் - காடு. செய்ய - செம்மையான, சிவந்த. தனயன் - மகன். அங்கம் - உடல். அகற்றல் - போக்குதல். மாநிலத்து - உலகத்து. வெம் - கொடிய. மாவினை - கர்மங்கள். மாதவரும் - தவத்தால் உயர்ந்தவரும். தொழுதேத்த - தொழுது+ஏத்த. ஏத்த - வணங்க. எழிலார் - எழில்+ஆர், அழகு பொருந்திய. கமலத்து - தாமரையிடத்து.

## 7. நாட்டு வணக்கம்

1. எந்தை - எம் தந்தை. முந்தையர் - முன்னோர். சிந்தை - மனம். சிறந்தது - பெருமை பெற்றது. வந்தனை - வணக்கம். வாயுற - வாயார. வந்தே மாதரம் - தாய் நாட்டுக்கு வணக்கம்.

2. இன் உயிர் - இனிய உயிர். எமை - எம்மை, எங்களை. ஈன்று - பெற்று. ஈந்தது - தந்தது. மழலைகள் - குழந்தை கூறும் மழலைச் சொற்கள். கன்னியர் - மண மாகாத இளம் பெண்கள். களித்தது - மகிழ்ந்தது. பொன் - அழகிய. இன்பு உற - இன்பம் அடைய. இல் - வீடு. போந்தது - சென்றது.

சென்னை-600 008.
36/68

RTR 774

# DESEEYA TAMIL VACHAKAM

**BOOK IV FOR STANDARD IV**

BY

T. P. GOPALAKRISHNAN, B.A., L.T.
*Headmaster, Board High School, Polur*

*Price Annas 8/-*